மாலை: 50 மணி: 4 ஏப்ரல் 2008 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு

## மதுரை சித்திரைத் திருவிழா



அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் காட்சி தரும் நாள் : 20-04-2008

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

# மதுரை



**அங்கயற்கண்ணி**

பங்கயற்கண் ணரியயரம் பரனுருவே தனக்குரிய படிவ மாகி
இங்கயற்கண் அகனுலக மெண்ணிறந்த சராசரங்க ளீன்றும் தாழாக்
கொங்கையற்கண் மலர்க்கூந்தற் குமரி பாண்டியன் மகள் போற் கோலங் கொண்ட
அங்கயற்கண் ணம்மையிரு பாதம்போது எப்போதும் அகத்துள் வைப்பாம்.

*-பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்*

## 1417ஆம் பசலி சித்திரைப் பெருவிழா

## (திருவள்ளுவர் ஆண்டு 2039)

**சர்வஜித்து வருடம் பங்குனி மாதம் 26ம் தேதி முதல்**

**சர்வதாரி வருடம் சித்திரை மாதம் 08ம் தேதி முடிய**

**முக்கிய திருநாட்கள் விபரம்**

| | |
|---|---|
| 09.04.08 பங்குனி 27 புதன் | **கொடியேற்றம்** (காலை 10.02 மணிக்கு மேல் 10.26 மணிக்குள்) |
| 16.04.08 சித்திரை 04 புதன் | **அருள்மிகு மீனாட்சியம்மன் பட்டாபிஷேகம்** (மாலை 6.58 மணிக்குமேல் இரவு 7.22 மணிக்குள்) |
| 17.04.08 சித்திரை 05 வியாழன் | **அருள்மிகு மீனாட்சியம்மன் திக்குவிஜயம்** |
| 18.04.08 சித்திரை 06 வெள்ளி | **அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம்** (காலை 09.30 மணிக்குமேல் 09.54 மணிக்குள்) |
| 19.04.08 சித்திரை 07 சனி | **அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருத்தேர்** (காலை 6.00 மணிக்கு வடம் பிடித்தல்) |
| 20.04.08 சித்திரை 08 ஞாயிறு | **பொற்றாமரைக்குளத்தில்தீர்த்தம்; தேவேந்திர பூஜை** |

அனைவரும் வருக — இறையருள் பெறுக

**திருப்பணி நன்கொடை வேண்டுகோள்**

இத்திருக்கோயிலின் கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு அனைத்து இராஜகோபுரங்கள் மராமத்து செய்து பெயிண்டிங் செய்தல் பணி, கமலம் பெயிண்டிங் பணி, அனைத்துபகுதிகளிலும் மின்னோட்டம் புதுப்பித்தல் பணி, புதிய ஜெனரேட்டர் மற்றும் புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூபாய். 5 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருப்பணி வேலைகளுக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகின்றனர். நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி
இணை ஆணையர்/ நிர்வாக அதிகாரி, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மதுரை 625 001.
தபால் பெட்டி எண். 100. வலைதளம் மூலமும் செலுத்தலாம் வலைதளம் முகவரி www.maduraimeenakshi.org


**கருமுத்து தி. கண்ணன்**
தலைவர், அறங்காவலர் குழு

**ப. ராஜா** பி.எஸ்சி., பி.எல்.,
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
ருக்மணி பழனிவேல்ராஜன், சு. இராஜாராம், டாக்டர். வ. புகழகிரி, எம். பாலசுப்பிரமணியன்.



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2039 சர்வதாரி - சித்திரை மாதம்
மாலை: 50 மணி 4 ஏப்ரல் 2008

பேரன்புடைப் பெருந்தகையீர்!
வணக்கம்.

அருள்மிகு மீனாட்சி ஆட்சி புரியும் மதுரையில் சித்திரைத் திருவிழா தொடங்குகிறது. தங்கையின் திருமணத்தைக் காணவரும் கள்ளழகரின் குதிரை வாகனக் காட்சியை முகப்போவியமாக கொண்டு இந்த இதழில் நமது பயணம் தொடர்கிறது.

மக்கள் திரளின் நடுவே தங்கக்குதிரையில் கள்ளழகரைக் காண்பதே தனி சுகமாக இருக்கின்றது. உலக நாயகியைப் போற்றி பொன்மலர்கள் தூவி இந்த இதழினைத் தொடங்குகிறோம்.

அன்னையின் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து அற்புத நூல்களைப் பாடி தமிழ் உலகை மகிழ்வித்த அடியார்களை இவ்விதழில் சிந்திக்க வைக்கிறார் பொற்கிழிக்கவிஞர் சொ.சு.மீ.சுந்தரனார். அம்பிகையின் பொற்கிழியை பொற்கிழிக்கவிஞர் போற்றுவது பொருத்தமாக உள்ளது.

மலைக்கவைக்கும் மலைநாட்டு மன்னனாக சொல்லோவியத்தில் குலசேகர ஆழ்வாரை தீட்டியுள்ளார் வேலூர் ம. நாராயணன் அவர்கள்.

அப்பரடிகளின் வாழ்வுக்கு காரணமாக இருந்தவர் தவப்பெருஞ்செல்வி திலகவதியார். “தூண்டு தவவிளக்கனையார்” எனும் தலைப்பில் அவரைப்போற்றிக் கட்டுரை வரைந்துள்ளார் டாக்டர். திருமதி. இராதா தியாகராஜன் அவர்கள்.

சித்திரை சதயம் அப்பரடிகள் அருட்ஜோதியில் கலந்த நாளாகும். வைணவத்தை நிலைநிறுத்திய எம்பெருமானார். அவதரித்ததும் சித்திரை திருவாதிரையில் ஆகும். இந்த இருபெரும் சான்றோர்களையும் உலகம் ஒளிபெற உதித்தவர்கள் எனும் தலைப்பில் சிந்தித்து மகிழ்கிறோம்.

கோயம்பேடு அருள்மிகு குறுங்காலீசுவரர் திருக்கோயிலின் சரபேஸ்வரர், அடையாறு அனந்த பத்மநாப சுவாமி திருக்கோயில், திருவதிகை அரங்கன் திருத்தலம் ஆகியவை திருத்தல உலாக்களாக இவ்விதழில் வெளிவந்துள்ளன.

தன்னையும் காணார் எனும் தலைப்பில் அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் அமுதமொழிகள் அவரது நினைவலைகளாக வெளிவந்துள்ளது.

அருணவசந்தனின் ஐராவதம் பூசித்த அற்புதத் தலம் வழுவூர் ஐயனீச்சுவரத்தின் பெருமைகளும் பனையபுரம் அதியமான் அவர்களின் பட்டம், பதவிகள் தரும் பிச்சிவாக்கம் அருள்மிகு பட்டமுடீஸ்வரர் திருக்கோயில் சிறப்புகளும் இவ்விதழில் வெளிவந்துள்ளன.


இந்த இனிய வேலையில் இறையருளால் அன்பர்கள் யாவருக்கும் எல்லா நன்மைகளும் நிகழவேண்டும் என்று சிந்தனை செய்கிறேன்.

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர்

# குறளோவியம்

## தலையாய பண்பு



ஒருநாள் மாலைப்பொழுது! ஏரிக்கரை ஓரமாக வள்ளுவர் மெல்ல நடந்து சென்று கொண்டிருந்தார். ஆழ்ந்த சிந்தனை. சற்று நிற்பார். மீண்டும் நடப்பார். அவரைக் கடந்து இருவர் ஏதோ வாயாடிக்கொண்டு போயினர்.

''யாரப்பா இந்த ஆள்? எப்போது பார்த்தாலும்... ஏரிக்கரை, குளக்கரை, மலைப்பாறை என்று அலைந்து கொண்டேயிருக்கிறான். வானைப் பார்க்கிறான். பூமியைப் பார்க்கிறான். நெற்றியைச் சுருக்குகிறான். யார் இது?'' இப்படி ஒருவன் கேட்க, மற்றவன் ஏளனமாக விளக்கமளித்தான்.

''வள்ளுவனாம்! அதிலும் சாதாரண வள்ளுவன் இல்லையாம்! திருவள்ளு வனாம்! சிந்திக்கிறானாம். அறநூல் எழுதுகிறானாம் கிறுக்கன்! எத்தனையோ பித்தர்களில் இவன் ஒரு பித்தன்!''

சிந்தனை கலைந்தது வள்ளுவப் பெரியாருக்கு! செவியில் விழுந்தது அவர்கள் வாரியிறைத்த வசைமொழி! இழிமொழி! அவர்களைத் திரும்பிப் பார்த்தார். அவர்கள் வள்ளுவரை நோக்கி ஏகடியம் செய்துகொண்டே போய்விட்டனர். ஏரியோரத்தில் சிலர் கழனி வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தனர் ஒரு பகுதியில்! கழனியில் உழுது கொண்டிருந்தனர் ஒரு பகுதியில்! கிணறு தோண்டிக் கொண்டிருந்தனர் மற்றொரு பகுதியில்! அனைத்தையும் பார்த்த வள்ளுவருக்கு ஒரு அழகான உவமைக் குறள் கிடைத்தது.

''தன்னை வெட்டியும் தோண்டியும் புண்படுத்துகிறவரையும் நிலம் பொறுத்துக் கொண்டுஅவர்களையும் தன்மீதே தாங்கி நிற்கிறதல்லவா? அதைப் போலத்தான் நம்மை இகழ்ந்து பேசுகின்றவர்களையும் பொறுத்துக் கொள்வது நம் தலையாய பண்பாகும்'' என்று தனக்குத்தானே வள்ளுவர் சொல்லிக் கொண்டார். குறள் பிறந்துவிட்டது.

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை''.

நெஞ்சில் இந்தக் குறளை எழுதிக் கொண்ட வள்ளுவர், நிலமகளைப் பார்த்து ஒரு கேள்விக் கணையைத் தொடுத்தார்.

''நிலமகளே, உன்னைத் துன்புறுத்துவோரை நீ பொறுத்துத் தாங்கிக் கொள்கிறாய்! உன்னைப் பார்த்து நானும் என்னை என்


எதிரில் இகழ்ந்து பேசியோரைப் பொறுத்துக் கொண்டேன். ஆனால் எனக்கு ஒரு ஐயப்பாடு! அதனை நிலமகளே, நீ எனக்கு விளக்குவாயாக! நேரில் பழிச்சொல் கூறுவோர் ஒருபுறமிருக்க, ஒருவர் நேரில் இல்லாதபோது அவர்மீது பழிச்சொல் கூறுவதைச் சிலர் தங்கள் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்களே, அத்தகையோர் உடல் பாரத்தையும் சுமப்பதுதான் உனக்கு அறம் என்று நீ கருதிக் கொண்டிருக்கிறாயா?''

வள்ளுவர் கேட்ட இந்தக் கேள்வியும் ஒரு குறளாக வடிவெடுத்துவிடுகிறது.

"அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை''

அதிகாரம்: 16 பொறையுடைமை பாடல் 151

அதிகாரம்:19 புறங்கூறாமை பாடல் 189



மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர்

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே -


1. அருள்மிகு உமையம்மை 108 போற்றிகள் 4
2. அம்மன் அடியார்கள் - சொ. சு . மீ. சுந்தரம் 6
3. மலைக்கவைக்கும் மலைநாட்டு மன்னன்- வேலூரர் ம. நாராயணன் 9
4. தூண்டு தவ விளக்கனையார் - டாக்டர் திருமதி. இராதா தியாகராஜன் 12
5. சங்கடங்கள் நீக்கும் சரபேஸ்வரர் 15
6. ஸ்ரீ அனந்த பத்மநாப சுவாமி திருக்கோயில் 17
7. உலகம் ஒளிபெற உதித்தவர்கள் - பூசை.ச. ஆட்சிலிங்கம் 20
8. பசு - சு. சுகுமாரன், மன்னார்குடி 21
9. உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ.இராமநாதபிள்ளை 25
10. திருவதிகை அரங்கன் - புதுப்பேட்டை வ. கோவிந்தன் 29
11. தன்னையுங் காணார் - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நினைவலைகள் 30
12. ஐராவதம் பூசித்த அற்புதத் தலம் வழுவூர் அயனீச்சரம் 33
13. பட்டங்கள், பதவிகள் தரும் பட்டமுடீஸ்வரர் திருக்கோயில் - பனையபுரம் அதியமான் 37

# அருள்மிகு உமையம்மை 108 போற்றிகள்




ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
ஓம் அகில உலகுக்கும் அன்னாய் போற்றி
ஓம் அஞ்செஞ் சீரடி அமுதே போற்றி
ஓம் அடியவர்க் கின்பம் அருள்வாய் போற்றி
ஓம் அடியார் உளத்துள் விளக்கே போற்றி
ஓம் அடியார் வினைகெட ஆள்வாய் போற்றி
ஓம் அணுகா தவர்க்குப் பிணியே போற்றி
ஓம் அணுவிலும் சிறிய அணுவே போற்றி
ஓம் அண்டம் யாவையும் பூத்தாய் போற்றி
ஓம் அரவ முடியில் இருப்பாய் போற்றி
ஓம் அருள்சூல் கொண்ட அம்மா போற்றி
ஓம் அருள்நிறை கடலே அமுதே போற்றி
ஓம் அழகன் முருகனை அளித்தாய் போற்றி
ஓம் அறத்தின் வடிவே அருளே போற்றி
ஓம் அறிவும் மகிழ்வும் அருள்வாய் போற்றி
ஓம் அறுவர்க்கு இளைய நங்காய் போற்றி
ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி
ஓம் ஆசை தீரக் கொடுப்பாய் போற்றி

ஓம் ஆடகத் தாமரை அணங்கே போற்றி
ஓம் ஆடல் கண்டருளிய அணங்கே போற்றி
ஓம் ஆதி முதலே அருளே போற்றி
ஓம் ஆயிரம் திருப்பெயர் உடையாய் போற்றி
ஓம் ஆரா அமுதம் ஆனாய் போற்றி
ஓம் ஆருயிர் வளர்க்கும் மருந்தே போற்றி
ஓம் ஆலம் அமுதுசெய் அன்னாய் போற்றி
ஓம் ஆறா தாரத்து அமர்ந்தாய் போற்றி
ஓம் இமயமடக்கொடித்தாயே போற்றி
ஓம் இமவான் பெற்ற தவமே போற்றி
ஓம் இரவாய்ப் பகலாய் விரிந்தாய் போற்றி
ஓம் இருமையும் உதவும்எம் தாயே போற்றி
ஓம் ஈசர் பாகத்து உறைவாய் போற்றி
ஓம் உயிர்க்கு உயிராம் உணர்வே போற்றி
ஓம் உலகெலாம் ஈன்ற உமையே போற்றி
ஓம் உள்ளக் கோயில் விளக்கே போற்றி
ஓம் எல்லா உலகமும் ஆனாய் போற்றி
ஓம் ஏதம் அகற்றும் மாதே போற்றி
ஓம் ஏழிசை வல்லி எந்தாய் போற்றி
ஓம் ஒளிமதிச் செஞ்சடை உடையாய் போற்றி
ஓம் ஒளிரும் ஒளிக்கு இடமே போற்றி
ஓம் ஒன்றில் விரிந்த பலவே போற்றி
ஓம் ஓங்கார உட்பொருள் உமையே போற்றி
ஓம் ஓசை ஒலிஎலாம் ஆனாய் போற்றி
ஓம் ஓத அரிய உணர்வே போற்றி
ஓம் ஐங்கரன் தன்னை அளித்தாய் போற்றி
ஓம் ஐந்தெழுத்துட் பொருள் ஆனாய் போற்றி
ஓம் ஐந்தொழில் இயற்றும் அன்னாய் போற்றி
ஓம் கடவுள் மணியே கதிரே போற்றி
ஓம் கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஓம் கண்ணே கண்ணின் மணியே போற்றி
ஓம் கயிலைப் பதமருள் கருணை போற்றி
ஓம் கருமையில் அழகிய கலையே போற்றி
ஓம் கரும்பின் இனிய மொழியாய் போற்றி
ஓம் கற்பகத் தருவே கலையே போற்றி
ஓம் கன்னியர் நோன்பு உகப்பாய் போற்றி
ஓம் காவியங் கண்ணி உமையே போற்றி
ஓம் கானகம் உகந்த காளி போற்றி
ஓம் குவளை மலர்க்கண் கொண்டாய் போற்றி
ஓம் கொன்றை வேய்ந்த குழலாய் போற்றி
ஓம் சங்கரனார் மனை விளக்கே போற்றி
ஓம் சிந்தை குடிபுகும் சிவையே போற்றி
ஓம் சிறக்கும் கமலத் திருவே போற்றி
ஓம் சீர்சால் வரமருள் தாயே போற்றி
ஓம் தமிழின் இனிய சுவையே போற்றி
ஓம் தாருகன் பேருரம் கிழித்தாய் போற்றி
ஓம் திருநீற்று ஒளியே திறமே போற்றி
ஓம் தீபச்சுடராய்த் திகழ்வாய் போற்றி
ஓம் தூயர் உளத்தில் இருப்பாய் போற்றி
ஓம் தேடற்கு அரிய நிதியே போற்றி
ஓம் தோன்றாத் துணைக்கோர் துணையே
போற்றி
ஓம் நஞ்சமு தாக்கிய நங்காய் போற்றி
ஓம் நறுமா மலர்ச் சடையாய் போற்றி
ஓம் நாயகி நாரணி நான்முகி போற்றி
ஓம் பஞ்சினும் மெல்லடிப் பாவாய் போற்றி
ஓம் பண்ணார் இன்தமிழ்ப் பாவாய் போற்றி
ஓம் பழமறைப் பொருளே பயனே போற்றி
ஓம் பனிமால் இமயப் பிடியே போற்றி
ஓம் பாசம் அங்குசம் உடையாய் போற்றி
ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
ஓம் பாலினும் நன்மொழிப் பாவாய் போற்றி
ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
ஓம் பிள்ளைச் செல்வம் அருள்வாய் போற்றி
ஓம் புவித்தலம் அனைத்தும் பூத்தாய் போற்றி
ஓம் பூதம் ஐந்தாய் விரிந்தாய் போற்றி
ஓம் மகிடன் தலைமேல் அந்தரி போற்றி
ஓம் மங்கல மங்கையர் தவமே போற்றி
ஓம் மஞ்சள் குங்குமம் காப்பாய் போற்றி
ஓம் மணியே மணியின் ஒளியே போற்றி
ஓம் மருளில் விளைந்த தெருளே போற்றி
ஓம் மலரே மலரின் மணமே போற்றி
ஓம் மலைவளர் காதலி உமையே போற்றி
ஓம் மலையவன் மகளாய் உதித்தாய் போற்றி
ஓம் மரகத மணியின் ஒளியே போற்றி
ஓம் முத்தலைச் சூல முதல்வி போற்றி
ஓம் முப்பத் திரண்டறம் வளர்ப்பாய் போற்றி
ஓம் முப்புரம் எரித்த முதல்வி போற்றி
ஓம் முழுவதும் ஈன்ற முதலே போற்றி
ஓம் மூவா முகுந்தற்கு இளையாய் போற்றி
ஓம் மோகம் அழிக்கும் முதல்வி போற்றி
ஓம் யாவர்க்கும் மேலை இறைவி போற்றி
ஓம் யாழினும் இனிய மொழியாய் போற்றி
ஓம் வஞ்சகர் நெஞ்சில் வாராய் போற்றி
ஓம் வம்பில் பழுத்த கனியே போற்றி
ஓம் வாசமலர் எலாம் ஆனாய் போற்றி
ஓம் வெற்றி வெல்போர்க் கொற்றவை போற்றி
ஓம் வேண்ட முழுதும் தருவாய் போற்றி
ஓம் வேண்டுவோர் வேண்டுவ ஈவாய் போற்றி
ஓம் வேதத் தொடையின் பயனே போற்றி
ஓம் வேதநாயகியே போற்றி போற்றி

- நிறைவாக அந்தந்த திருத்தலத்திற்கு உரிய அம்மையின் பாடல் ஒன்றினை ஓதிப் போற்றியை நிறைவு செய்யலாம்.

# அம்மன் அடியார்கள்



எல்லா உலகங்களையும் ஈன்றெடுத்தவள் பராசக்தி. அவள் இல்லையேல் உலகமோ உலகின் சுழற்சியோ, கோள்களோ, கோள்களின் இயக்கமோ, எதுவும் இல்லை. அகிலாண்ட கோடி உலகீன்ற பின்னையும் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூப மயிலானவள் அவள். நிலைச்சக்தியைச் சிவம் என்றும் இயங்கு சக்தியை உமை என்றும் தமிழ்மக்கள் வழிபட்டனர். 'அருளது சக்தியாகும் அரன் தனக்கு' என்றபடி திருவருளே சக்தியாகும்.

இறைவன் திருவருள் பெற்ற அனைவருமே அம்பிகையின் அடியார்கள் தான். அருள் வடிவான அன்னை ஞானப்பால் ஊட்ட, சிவநெறியே சிந்திக்கும் சிவஞானம் கைவரப் பெற்று, தனக்கு பால் கொடுத்த அன்னையின் செவிகளை அலங்கரித்த அணியான தோடு என்ற சொல்லில் திருமுறையைத் தொடங்கித் 'தோடுடை செவியன்' எனப்பாடிய திருஞான சம்பந்தரும் 'ஞானப்பூங் கோதையாள் பாகத்தான் காண்' என்று பாடி அம்மையுடன் அப்பனைக் கண்டு 'கண்டேன்' அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்' என்று வழிபட்டவருமான அப்பரடிகளும், காஞ்சி காமாட்சியால் இடக்கண்பெற்ற சுந்தரமூர்த்தியும், பாவை பாடிச் சக்தியை வியந்த மாணிக்கவாசகரும் அம்மன் அடியார்களே ஆவர்.

பழைய காலத்துக் கொற்றவை வழிபாடு சக்தி வழிபாடாக மாறியது. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அம்மன் வணக்கம் தனிவணக்கமாக ஏற்பட்டது என்பது அறிஞர் கருத்து. ஆழியை நாழியால் அளப்பது போலவும் அண்ணாமலையின் மீது சிற்றெறும்பு ஏறப் பார்ப்பது போலவும் அம்மன் அடியார் பெருமையினை இயன்ற வரை எடுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திருமூலர்:** நங்கையினால் நாம் அனைத்தும் செய் தாற்போல் நாடனைத்தும் நங்கையினால் செய்தளிக்கும் நாயகன் (திருக்களிற்றுப் படியார்)

ஆகிய சிவபெருமானின் சக்தி காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழிலும் நடத்துகிறாள். இக்கருத்தை

''ஓங்காரி என்பாள் அவள்ஒரு
பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ஹ்ரீங்காரத் துள்ளே இனிதமர்ந் தாளே''

என்று பாடிய திருமூலர் அம்மன் அடியார்களின் காலத்தால் முற்பட்டவர். சக்தியின் விளையாடலே எல்லாம் என்பதை உணர்த்தியவர். நான் உறங்கினேன். அன்னை மனோன்மணி வளைக்கரங்களால் என் கழுத்தை அணைத்தாள். என் வாயில் தாம்பூல எச்சிலை உமிழ்ந்தாள். உறங்காதே என்றாள் நான் பாட உபாயம் செய்தாள்.


''உறங்கும் அளவில் மனோன்மணி வந்து
கறங்கு வளைக்கை கழுத்தாரப் புல்லிப்
பிறங்கொளித் தம்பலம் வாயில்
உமிழ்ந்திட்டு
உறங்கலையா என்றோர் உபாயம்
செய்தானே'' (திருமந்திரம் 1107)

'எங்கெங்குக் காணினும் சக்தியடா- தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா - அங்குத்
தங்கும் வெளியினில் கோடியண்டம் - அந்தத்
தாயின்கைப் பந்தென ஓடுமடா'

என்று குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது. சக்தி வழிபாட்டுக்குரிய மந்திரங்களையும் சக்கரங்களையும் விரித்துப் பாடியவர் திருமூலர்.

குமரகுருபரர்: அலைமகள், கலைமகள், மலைமகள் மூவரையும் பாடி அவர்கள் அருள்பெற்ற அம்மன் அடியார் குமரகுருபரர், மதுரையில் அவர் மீனாட்சி பிள்ளைத் தமிழ்பாடி, அரங்கேற்றம் செய்கிறார். 'தொடுக்கும் கடவுட் பழம் பாடல் தொடையின் பயன்' என்றும் சொக்கலிங்கப் பெருமான் 'திருஉள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியம்' என்றும், 'தென்னற்கும் அம் பொன் மலை மன்னற்கும் ஒரு செல்வி' என்றும் 'தமிழொடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்த கொடி' என்றும் 'தெளிதமிழ் மதுரையில் வளருமொர் இளமயில்' என்றும் அவர் பாடுவதைக் கேட்க மீனாட்சியம்மை ஒரு குழந்தையாக வந்து மன்னன் திருமலை நாயக்கன் மடியில் வீற்றிருந்தாள். 'மூலத் தலத்து முளைத்த முழுமுதலே! முத்தம் தருகவே' என்று அவர் பாடியதால் மன்னன் கழுத்து முத்து மாலையை எடுத்துக் குமரகுருபரர் கழுத்தில் போட்டு மறைந்து விட்டாள். இந்த பேரருளுக்கு இலக்கான குமரகுருபரர் மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை ஆகியவையும் பாடி அன்னையை வழிபட்டார்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழில் காலத்தால் முற்பட்டது 12ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் ஆகும். பெண்பாற் பிள்ளைத் தமிழில் காலத்தால் முற்பட்டது 17ஆம் நூற்றாண்டில் குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் ஆகும்.



கடவுளைப் பாட்டுடைத் தலைவன் ஆக்கிப் பிள்ளைத் தமிழ் பாடுவதைத் தொடங்கி வைத்தவரும் குமரகுருபரரே ஆவார்.

கி.பி.1625 ஸ்ரீ வைகுண்டத்தில் பிறந்து, ஐந்தாண்டுகள் வரை வாய்பேசாது இருந்த, குமரகுருபரர் திருச்செந்தூர் முருகன் பேரில் கந்தர் கலிவெண்பா பாடினார். மதுரையில் பிள்ளைத்தமிழ் பாடினார். சிதம்பரத்தில் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை பாடினார். காசிக்குச் சென்றார். அங்கு விசாலாட்சியைப் பாடினார். காசிக் கலம்பகலத்தில்.

''பாவலரும் நாவலரும் பண்மலரக்
கண்மலரும்
காவலரும் ஏடவிழ்க்கும் காசியே -
தீவளரும்
கஞ்சக் கரத்தாள் கருணை விசாலாட்சி
அஞ்சகக் கரத்தாள் அகம்.''

என்று பாடினார். காசியில் முகமதிய மன்னனிடம், மடம் கட்ட இடம் கேட்கச் சென்றார். அன்னையின் அருளால் சிங்கம் வர, அதன் மேலமர்ந்து சிங்காதனத்து மன்னனிடம் சிங்க வாகனக் கவிச்சிங்கமாகப் போய் பேசினார். மன்னன் மொழி இந்துஸ்தானி. அந்த மொழிப்புலமை தனக்கு வேண்டுமென்று கலைமகளை வேண்டிச் சகலகலா வல்லி மாலை பாடினார்.

''மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவில் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடி
உண்டேனும் விளம்பில் உன்போல்

கண்கண்ட தெய்வமுளதோ சகல
கலாவல்லியே''

என்று பாடினார். இந்துஸ்தானியில் சிறப்பாகப் பேசி இடம் பெற்றார் அதில் மடம் கட்டினார். கேதாரநாதர் கோயிலும் கட்டினார்.

இவ்வாறு மீனாட்சியையும் கலைமகளையும் பாடிய குமரகுருபரர் தான் பாடிய பிள்ளைத்தமிழ் இரண்டிலும் திருமகளாகிய அலைமகளையும் பாடினார். ''பைந்துழாய்க் காட்டிலே தண்ணிழலில் ஒதுங்குமோர் பசுங்கொடி'' என்று மீனாட்சி பிள்ளைத் தமிழில் திருமகளைப் பாடுகிறார். திருமால் மார்பிலே திருமகள் இருக்கிறாள். கௌஸ்துபம் என்ற மணியும் இருக்கிறது. இந்த மணி அவள் காலில் உறுத்துவதால் அவள் துளசி மாலையின் நிழலில் ஒதுங்குகிறாள் என்ற கற்பனை நினைந்து மகிழத் தக்கது.

பாவேந்தர் பாரதிதாசன் குமரகுருபரர் பாடிய மீனாட்சி பிள்ளைத்தமிழ் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் இரண்டிலும் மனத்தைப் பறிகொடுத்தவர் 'எதிர்பாராத முத்தம்' என்ற நூலில் இரண்டாம் பகுதியில் குமரகுருபரரின் பெருமைகளைப் பேசுகிறார். தம் மாணவர்க்கு இப்பிள்ளைத் தமிழைப் பாடம் சொல்லியுள்ளார்.

'எங்கெங்குக் காணினும் சக்தியடா- தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா - அங்குத்
தங்கும் வெளியினில் கோடியண்டம் -
அந்தத்
தாயின்கைப் பந்தென ஓடுமடா' என்று அவரையும் பாடவைத்தவள் பராசக்தி தானே.

அபிராமி பட்டர்

அம்மன் அருள் பெற்ற அடியார்களில் தலைசிறந்த இன்னுமொருவர் அபிராமி பட்டர். இவர் பாடிய அபிராமி அந்தாதியும் அபிராமியன்னை பதிகமும் தமிழ் கொஞ்சும் சலங்கைகளாக அம்மன் திருவடிகளை அலங்கரிக்கின்றன. திருக்கடவூரில் தோன்றிய சுப்பிரமணிய பட்டர் அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லியான அபிராமி அம்மையிடம் மனத்தைச் செலுத்தி அவளை ஒளி வெள்ள மாகக் கண்டு தம்மை மறந்து மோன நிலைபெற்று வழிபடுபவர். ஆடி அமாவாசைய ன்று அபிராமி ஆலயத்தில் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். தஞ்சை மன்னர் சரபோஜி, கடலாடி விட்டு, திருக்கடவூர் வந்து அன்னையைத் தெரிசிக்கச் சென்றார். கண்மூடி இருந்த சுப்பிரமணிய பட்டரைப் பார்த்து இவர் யார் எனக் கேட்க இவர் ஒரு பித்தர் எனப் பொறாமை கொண்ட போலிப் பக்தர்கள் புகன்றனர். மன்னர் அவரை எழுப்பினார். இன்று என்ன திதி? சொல்லும் என்று அதட்டிக் கேட்டார். அன்னையின் பேரொளி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த பட்டர் இன்று (பௌர்ணமி) முழுநிலவு நாள் என்றார்.

மன்னர் சினந்தார். இன்று பௌர்ணமியா? அப்படியானால் முழுநிலவு தென்பட வேண்டுமே அப்படித் தென்படாவிட்டால், உம்மைச் சிரச்சேதம் செய்வேன் என்று கூறிச் சென்றுவிட்டார்.

பட்டர் தன்னறிவு பெற்றார். தாயைப் பணிந்தார். அன்னையின் மேல் அபிராமி அந்தாதி பாடத் தொடங்கிப் பாடினார் 69ஆவது பாடலில் அன்னையின் அருட்கடைக்கண் பார்வையைப் போற்றி

''தனந்தரும்; கல்விதரும் ஒருநாளும்
தளர்வறியா
மனந்தரும்; தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில்வஞ்சமில்லா
இனந்தரும்; நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக்கண்களே''

என்று பாடித் தன்னை மறந்தார். தமிழ் மழை பொழிந்தது. தாய் மகிழ்ந்தாள் 79ஆம் பாடலில்

'விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு
வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கு
அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களே
செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்
மோடென்னகூட்டினியே''

என்று பாடியதும் அம்மை தனது காதணிகளில் ஒன்றை எடுத்து வானில் சுழற்றி விட, அது நிலவாய்த் தோன்றி, நிலவை விட அதிகமான நிறைவொளி பரப்பி நின்றது. சுப்பிரமணிய பட்டர் அபிராமி பட்டரானார். அவர் பாடிய அபிராமி பதிகம் அபிராமி அந்தாதி இரண்டும் உள்ளத்தை உருக்கும் உயர் மந்திரங்களாக விளங்குகின்றன.

**பொற்கிழி கவிஞர். சொ.சு. மீ. சுந்தரம்.**

அடுத்த இதழில் தொடரும்..

# மலைக்க வைக்கும் மலைநாட்டு மன்னன்

திருமால்நெறியைப்போற்றிய பன்னிரு ஆழ்வார்கள் பல திறப்பட்டவர்களாக இருந் துள்ளனர். அந்தணர்கள் உள்ளனர். அரசர்கள் உள்ளனர். பஞ்சமர் உள்ளனர்.

பாவையர் உள்ளனர். சேர நாட்டைச் சிறப்புற ஆண்ட மன்னன் குலசேகரர். திருமால் மீது கொண்ட பற்றின் மிகுதியால் ஆட்சிப் பொறுப்பையே துறந்து ஆழ்வார் எனும் நிலைக்கு உயர்ந்தவர்.

சேர நாட்டின் தலை நகர் வஞ்சி: அதைச் சிறப்புற ஆண்டு வந்தவன் திடவிரதன். காலம் எட்டாம் நூற்றாண்டு. அவனுக்கு வாராது வந்த மாமணியாக, வந்து பிறந்தவர்தான் குலசேகரன். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதற்கிணங்க வைணவ இலக்கிய வரலாற்றில் நிலையானதோர் இடத்தைத் தாம் பெறுவதற்கான சிறப்புக் கூறுகளுடன் இளமையிலேயே திகழ்ந்தவர். ஆம்! ஐந்தாம் வயது தொடங்கிக் குலசேகரர் கல்வியையும் கலைகளையும் விருப்பத்தோடு கற்கலானார். பெரும்பாலான அரசர் வீட்டுக் குழந்தைகள் அவ்வாறு கற்பதில்லை என்பது வரலாறு.



ஸ்ரீ குலசேகராழ்வார்
மாசி-புனர்பூசம்(திருவஞ்சைக்களம்)

மொழிநிலையில் தமிழையும் வடமொழியையும் பழுதறக்கற்றார். கலை நிலைகளில் யானையேற்றம், குதிரையேற்றம் தேர் ஓட்டுதல் வாள் சண்டை, குத்துச் சண்டை, ஈட்டி எய்தல் ஆகியவற்றை நன்கு கற்றார்.

தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்கினார். கவியுள்ளங் கனிந்து கவிதைகள் இயற்றவும் வல்லவரானார். உலகியலில் போர்த்திறன் கொண்டவர்கள் வன்னெஞ்சங் கொண்டவர்களாகவும், கவித்திறங் கொண்டவர்கள் மென்னெஞ்சங் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். ஆனால், குலசேகரர் ஒரே சமயத்தில் இருநிலைகளிலும் தேர்ந்தவராகத் திகழ்ந்திருக்கின்றார்.

தம்மீது பொறாமை கொண்டு படையெடுத்து வந்த சோழ, பாண்டிய மன்னர்களைப்போரில் வென்று, பாண்டியனின் மகளை மணந்து கொண்டார். ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் அரங்கன் மீது பெரும்பற்று கொண்டு அரங்கன் தொடர்பான கதைகளைக் கேட்பதிலும், உரைப்பதிலும் பாடல்கள் புனைவதிலும் தம் மனத்தை ஆழ்த்துபவரானார்.

ஒருமுறை இராமன், இராவணனின் பல்லாயிரக் கணக்கான இலங்கை வீரர்களால்

சூழப்பட்டுத் தனிமையில் சிக்கிக் கொண்டார். என்ற கதையைக் கேட்டவுடன் அஃது கதைதான் என்பதையும் மறந்து உணர்வின் உச்ச நிலைக்குச் சென்று, 'இராமபிரானைக் காப்பாற்றத் தமது படைகளை உடனடியாகத் திரண்டெழுமாறு ஆணையிட்டார்.

அமைச்சர்கள் குழம்பிப் போயினர். குலசேகரனைப் படாதபாடுபட்டுத் தன்னிலைக்குக் கொண்டுவந்து அமைதிப்படுத்தினர்.

மன்னரின் மாலவன் பற்று, பித்தாகவே மாறிவிட்டதை உணர்ந்து, வைணவ அறிஞர்களையும், அடியவர்களையும் அரண்மனைப் பக்கமே வராதவாறு சூழ்ச்சிகள் செய்தனர். மன்னரின் நவரத்தினமாலையை ஒளித்துவைத்து, அரண்மனைக்கு வரும் திருமாலடியார்கள் திருடிவிட்டனர்' என்று மன்னர் மனத்தில் வெறுப்பை ஏற்றினர் அமைச்சர்கள்.

ஆனால், நிகழ்ந்தது என்ன? திருமாலடியார்கள் இந்தத் தகாத செயலை ஒருபோதும் செய்திருக்கமாட்டார்கள் என உறுதியாக நம்பிய மன்னர் குலசேகரர், கொடிய நஞ்சுடைய பாம்பொன்றை ஒரு குடத்தில் விட்டு, உண்மையிலேயே திருமாலடியார் அந்த நவரத்தின மாலையைத் திருடியிருந்தால், பாம்பு தம்மை தீண்டட்டும் என்று சொல்லியவாறே குடத்துக்குள் கைவிட்டார்.

ஆனால் என்னவியப்பு! பாம்பு அவரைத் தீண்டவில்லை! அமைச்சர்களும் வெட்கித் தலைகுனிந்து நவரத்தினமாலையை மன்னனிடம் தந்துவிட்டனர். மன்னரும் அமைச்சர்களை மன்னித்து விடுட்டார்.

இவ்வாறு அல்லும் பகலும் திருமால் பற்றில் ஆழ்ந்து அமிழ்ந்து போனதால் இவர்களுக்கு, என்றென்றும் இறைநெறியில் 'ஆழ்வார்கள்' எனும் பொருளில் 'ஆழ்வார்கள் என்றே சிறப்புப் பெயர் தோன்றியது. நம் குலசேகரரும் தம்மை மறந்தார். பித்தேறிய நிலைக்குச் சென்றுவிட்டார்.

கவிபாடும் திறன் பெற்றிருந்ததால் தமது சிந்தனைகளைத் தேனினும் இனிய செந்தமிழ்ப் பாடல்களாக்கி நமக்குத்தந்து சென்றுள்ளார்.

உரியவேளையில் தம் மகனுக்கு முடி சூட்டிவிட்டுத் திருமால் தலங்காணப் புறப் பட்டுவிட்டார் குலசேகரர்.

திருவரங்கம், காஞ்சிபுரம், திருப்பதி முதலான திருத்தலங்களுக்கெல்லாம் புனிதப் பயணம் மேற் கொண்டு, (104) பாடல்களைப் பாடியுள்ளார். அவை அனைத்தும் 'பெருமாள் திருமொழி' எனும் திருப்பெயர் தாங்கி நாலாயிர திவ்வியபிரபந்தத்தில் அழகுறக் கொலுவிருக்கின்றன. அவற்றுள் சில பாடல் களின் நயத்தை இங்கே நாம் காண்போம்.

கங்கையில் நீராடிப் பாவத்தைப் போக்க விரும்பியிருக்கின்றார் குலசேகரர். அந்த விருப்பத்தைப் பின்னர் கைவிட்டுவிட்டார். ஏன் தெரியுமா? அரங்கனின் அருமை பெருமைகளை ஆடியும் பாடியும் போற்றிப் பரவுகின்ற திருமால் தொண்டர்களின் அடிப்பொடிகளின் கால் தூசுகளில் நாம் ஆடப்பெற்றாலே போதுமே; அனைத்துப் பாவங்களும் தொலைந்து போகும்! என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றார்.

''தோடுலா மலர் மங்கை தோளிணைத்
தோய்ந்ததும் சுடர்வாளியால்
நீடுமாமரம் செய்யுதும் நிரை
மேய்த்ததும் இவையே நினைந்து
ஆடிப் பாடி அரங்க! ஓ! என்று
அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆடநாம் பெறில், கங்கை நீர் குடைந்து
ஆடும் வேட்கை என் ஆவதே!''(659)

திருமாலிடத்துப் பற்றுக்கொண்டு மயிர்கூச்செரிய கண்ணீர் சொரிந்து நிலைகலங்கிக் கூத்தாடுகின்றவர்களைப் பித்தர்கள் என்று உலகம் சொல்கிறது. உண்மையில் இவர்கள் பித்தர்கள் அல்லர். திருமாலை நினையாதவர்களே பித்தர்கள் என்று வாதிடுகிறார் குலசேகரர்.

'மொய்த்துக் கண்பனி சோர மெய்கர்
சிலிர்ப்ப ஏங்கி இளைத்து நின்று
எய்த்துக் கும்பிடு நட்டமிட்டு எழுந்து
ஆடிப்பாடி இறைஞ்சி என்
அத்தன் அச்சன் அரங்கனுக்கு அடி
யார்கள் ஆகி அவனுக்கே
பித்தராம். அவர் பித்தர் அல்லர்கள்
மற்றையார் முற்றும் பித்தரே....!'(666)

ஒரு கால கட்டத்தில் சேர சோழ பாண்டியநாடு மூன்றிற்கும் தாம் தலைவராக அரசராகத் திகழ்ந்தமையை அருமையாக இப்பாடலில் பதிவுசெய்திருக்கிறார் குலசேகரர்.

''அல்லி மாமலர் மங்கை நாதன்
அரங்கன் மெய்யடியார்களின் தம்

எல்லை இல் அடிமைத் திறத்தினில்
என்றும் மேவு மனத்தனாம்
கொல்லி காவலன், கூடல் நாயகன்
கோழிக்கோன் குலசேகரன்
சொல்லின் இன்தமிழ் மாலை வல்லவர்
தொண்டர் தொண்டர்கள் ஆவரே...''
(667)

சேரநாட்டின் கொல்லி(வஞ்சி) நகர். பாண்டிய நாட்டின் மதுரை, சோழ நாட்டின் உறையூர் இவற்றிற்கு தாமே மன்னர். யானெழுதிய இனிய பாடல்களைப் பாடிப் போற்றுபவர் அடியார்க்கு அடியார்களாவர் என்கிறார்.

திருவேங்கடத்தின் அழகையும், சிறப்பு களையும் பாடாதவர்கள் திருமால் அடியவர்களும் அல்லர். உள்ளுதொறும் உள்ளுதொறும் உவகை சுரக்கச்செய்யும் பெருமையுடையது வேங்கடமலை! இங்கு என்னவாக வெல்லாம் பிறக்க ஆசைப்படுகிறார் தெரியுமா' சேரமன்னர் குலசேகரர்.

திருவேங்கடமலையிலுள்ள ஏரியில்
வாழும் நாரையாகப் பிறக்க விழைகிறேன்.
திருவேங்கடச் சுனையில் மீனாகப்பிறக்க
விழைகிறேன்.
திருமலையான் வாய் நீர் உமிழும்
தங்கவட்டிலைக்கையில் ஏந்தி
உள்ளே புகும் பேறு பெற்றவனாகப்பிறக்க
விழைகிறேன்.

இவ்வாறெல்லாம் பாடிவிட்டு. மனநிறைவு பெறாமல்

'செடியாய வல்வினைகள் தீர்க்கும்
திருமாலே!
நெடியோனே! வேங்கடவா! நின்
கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும்
கிடந்தியங்கும்
படியுாய்க் கிடந்துடன் பவளவாய்
காண்பேனே(689)''

என்று நெஞ்சுருகப் பாடுகின்றார். பக்தர்கள் மிதித்துச் செல்லும் படியாகக் கிடந்து வேங்கடவனின் பவளவாய் சிந்துகின்ற புன்னகையைக் காலமெல்லாம் கண்டு களித்துக் கொண்டிருப்பேன் என்பது பக்தியின் உச்சம் அல்லவா? சரி! இவ்வளவு பாடியும் மனநிறைவைப் பெற்றாரா குலசேகரர் என்றால் அதுதான் இல்லை.... இந்திரலோகத்தையே ஆளும் வாய்ப்பு கிடைத்து ஊர்வசியுடன் உறவாடும் பேறு கிடைத்தாலும் நான் வேண்டேன், மாறாக எம் அப்பன் திருவேங் கடவன் வாழும் இந்த மலையில் ஏதேனும் புல் பூண்டாகவாவது பிறப்பதைத்தான் நான் பெரிதும் விரும்புகிறேன் என்கின்றார்.

கேரளாவிலுள்ள வித்துவக்கோடு எனும் பதியில் உறையும் அம்மானை - பெருமானைப் பத்துப்பாடல்களில் போற்றி மகிழ்கிறார் குலசேகரர். ஒவ்வொருபாடலும் உலக நடை முறைகளை விளக்கும் ஓர் இனிய அரிய உவமையைத் தன்னிடத்தே கொண்டு திகழ்கின்றது அப்பாசுரம்.

அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்று
அவள்தான் அருள் நினைந்தே அழும் குழவி
போல்.
''கண்டார் இகழ்வனவே காதலன்தான்
செய்திடினும்
கொண்டானை அல்லார் அறியாக்
குலமகள் போல்..
எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல் நோக்கி வாழும் குடி போன்று..
வாளால் அறுத்துச் சுடினும்
மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்...
எங்கும் போய்க் கரைகாணாது
எறிகடல்வாய்
மீண்டும் வங்கத்தன் கூம்பு ஏறும்
மாப்பறவை போன்று...
திருமாலே என்றென்றும் நான்
உன்னையே சார்ந்துள்ளேன்.
எம்மைக் காப்பது நின் கடன்.
என்கின்றார்''.

தேவகியாக மாறி யசோதைக்குக் கிடைத்த வாய்ப்பு தமக்குக் கிடைக்கவில்லையே என்று புலம்புகின்றார். தசரதனாக மாறிக் கைகேயி சொல் கேட்டுக் கொடுமை இழைத்து விட்டதாக அழுகின்றார். தாயாக மாறி அருமையாகத் தாலாட்டுகின்றார். இவ்வாறு ஒருவரே பலராக மாறிப்பாடும் பொழுது, அந்தப் பாடுபொருள்மீது பாட்டுடைத் தலைவர் மீது அவர் எந்த அளவிற்கு ஆழமான ஈடுபாடும் இமாலயப் பற்றும் கொண்டிருந்தார் என்பது நமக்குப் புலனாகின்றது. இவ்வள வையும் தமது இருபத்தைந்து வயதிற்குள் சாதித்திருக்கிறார் குலசேகரர் என்பதுதான் நம்மை மலைக்க வைக்கின்றது. இவர் மலைக்க வைக்கும் மலைநாட்டு மன்னரன்றோ.

வேலூர் ம. நாராயணன்

# தூண்டு தவ விளக்கனையார்



சைவப் பேருலகிற்கு உய்வுப் பெருநெறி தந்தவர் திருநாவுக்கரசர். அப்பெருந்தகையாரை உருவாக்கித் தமிழ் நாட்டுக்கும் சைவத்திற்கும் தந்த பெருமை அவர் தமக்கையார் திலகவதியாரையே சாரும். இப்பெருந் தொண்டாற்றிய திலகவதியார், நாயன்மார் வரிசையில் இடம்பெற்று போற்றப் படுவதற்குச் சாலவும், தகுதியுடையார். ஆயினும், திருத்தொண்டத் தொகையிலும், பெரிய புராணத்திலும் திருத்தொண்டர் வரிசையில் சேர்க்கப்படாத திருவுளக்குறிப்பை யாமறியோம்.

பெற்றோரும், மணம் பேசியிருந்த கலிப்பகையாரும் உயிர் நீப்ப, தம் உயிரையும் விடத் துணிந்த திலகவதியார் தம்பிக்காக வாழ்ந்திருக்க எண்ணினார். அதே வேளையில் அவர் பேருள்ளத்தில் எழுந்த அன்பு, குடும்பம் என்ற அளவில் அமையாது. உயிர்கள் மேலெல்லாம் செல்லும் அருளாக வளர்ந்தது.

இந்நிகழ்வைச் சேக்கிழார் பெருமான்.

''தம்பியார் உளராக வேண்டும்''
என வைத்ததயா
உம்பருலகு அணையவுறு நிலை
விலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்காது
அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து
திலகவதி யார் இருந்தார்''
(திருநாவுக்கரசு-புரா-34)


என்று அருளிச் செய்தார்.

தம்பியாராகிய மருள் நீக்கியார்க்கு ஆதரவாக உயிர்வாழ நினைத்த திலகவதியார், பொன் அணி தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கும், மனைத் தவம் மேற்கொண்டு திருவதிகைப் பெருமானுக்குத் திருத்தொண்டு செய்து வந்தார். புறச்சமயமாகிய சமணத்தில் புகுந்த தம்பிக்காகப் பெருமானை எப்போதும் வேண்டிக் கொண்டார்.

''தூண்டுதவ விளக்கனையார்
சுடரொளியைக் கைதொழுது
என்னை ஆண்டருளும் நீராகில்
அடியேன் பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும்
எடுத்தாள
வேண்டும்'' எனப் பலமுறையும்
விண்ணப்பம் செய்தனரால்''
(திருநாவுக்கரசு -புரா -46)

திலகவதியாரைத் ''தூண்டு தவ விளக்கனையார்'' என்று சேக்கிழார் பெருமான் குறித்த நயம் போற்றத் தகுந்தது. தவம், தூண்டிய விளக்குப் போல் ஒளிமிகுந்து விளங்கியது என்ற கருத்தோடு, இத்தவ விளக்கு மற்றொரு விளக்கு ஒளிவிடச் செய்ய உதவியாக அமைந்தது என்ற நயமும் அமைந்துள்ளது.

திலகவதியார் பன்முறையும் இறைவனிடம் விடுத்த வேண்டுகோளும், இவரது தவமும்தான் புறச்சமயத்தில் புகழ்பெற்று விளங்கி, பல சமயத்தாரையும் வாதமிட்டு வென்ற திருநாவுக்கரசரை மனமாறச் செய்து சைவ



சமயத்தைப் பின்பற்றச் செய்தது. பெருமானும் சூலை நோய் தந்து அவரை ஆட்கொண்டார் என்று கூறலாம்.

இவ்வகையில், திலகவதியார் திருநாவுக்கரசர்க்கும் குருவாக அமைந்து, அவர் உள்ளத்தில் சிவநெறி சார்ந்த தவம் செய்ய வேண்டும் என்ற அறிவை. அதாவது பதிஞானத்தைத் தூண்டியவர் திலகவதியாரே ஆவார். இக்கருத்து பற்றியே சேக்கிழார் பெருமான் ''தூண்டுதவ விளக்கனையார்'' என்று திலகவதியாரைக் கூறினார்.

தனக்கு வந்த வயிற்று வலிநோயை பொறுக்கலாகாமல் துடித்த திருநாவுக்கரசர் சிவபிரானை வணங்கித் தமிழ் மாலை சார்த்தும் உணர்வு பெற்று பாடும்பொழுது, ''தாம் இக்கொடிய நோயால் வருந்தும் அளவிற்குச் செய்த கொடுமைகளை அறியேன்'' என்று திகைக்கின்றார்.

''கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன யானறியேன்
ஏற்றாய டிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடுதுடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே!''
(திருவதிகைப்பதிகம்-1)

''கூற்றாயினவாறு'' பதிகம்பாடி, இவ்வினா எழுமுன்பே, அம்மையார் விடை கூறிவிட்டார். இத்துன்பம் கொடுமை பல செய்த வினைக்காக அன்று. ''கற்றை வேணியர் அருளே காணும்'' என்றுரைத்தார். இப்பிணி தீர ''கழல் அடைந்தோர் பற்றறுப்பார்தமைப் பணிந்து பணி செய்வீர்'' எனப் பணித்தார்.

''கற்றை வேணியர் அருளே காணும்
இது, கழலடைந்தோர்
பற்றறுப்பார் தமைப்பணிந்து பணி
செய்வீர்'' எனப்பணித்தார்''
(திருநாவு-புரா-65)

ஒரு குருவாய் வரும் ஞானாசிரியர் மாணவர்க்கு உண்மையை உணர்த்தி ''இன்னது செய்க'' என்று வழி காட்டுவார் அவ்வாறே, திலகவதியாரும் வழி காட்டினார்.

திருக்கோயில் புகுவதற்கும், பணி மேற்கொள்ளுதற்கும் உரிமை உண்டாதல் வேண்டித் திருவைந் தெழுத்தி ஓதி திருநீறு அளிக்கின்றார்.

''திருவாளன் திருநீறு திலகவதியார்
அளிப்ப
பெருவாழ்வு வந்த'' தெனப்
பெருந்தகையார் பணிந்தேற்று அங்கு
உருவார அணிந்து தமக்குற்ற விடத்து
உய்யுநெறி
தருவாராய் தம்முன்பு வந்தார்பின் தாம்
வந்தார்''
(திருநாவு -புரா -67)

திருவாளன் திருநீற்றைக் குருவாக அமைந்து திலகவதியார் கொடுக்க, திருநாவுக்கரசர் ''பெருவாழ்வு'' கிடைத்தது எனக் கருதி உடம்பெல்லாம் அணிந்தார். திருக்கோயிலி னுள்ளே திலகவதியார் முன்பு செல்ல, திருநாவுக்கரசர் பின்னே சென்று அதிகைப் பெருமானின் அருள் பெற்றார். ''தம் முன்பு வந்தார்'' எனத் தமக்கையாரையும் ''பின் தாம் வந்தார்'' எனத் தம்பியாரையும் சேக்கிழார்

**(டாக்டர் திருமதி இராதா தியாகராசன், எம்.ஏ., பிஎச்.டி.)**


பெருமான் குறிக்கும் திறம் போற்றுதற்குரியது. ஈண்டும் திலகவதியாரே வழிகாட்டியாக அமைகின்றார். திருநீறணிந்து இருவரும் திருக்கோயிலுக்குள் புகுந்த நேரம் திருப்பள்ளி எழுச்சி நேரமாகும்.

நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும்
மாறவரும் திருப்பள்ளி எழுச்சியினில் மாதவம் செய்
சீறடியார் திருவலகும் திருமெழுக்கும் தோண்டியுங் கொண்டு
ஆறணிந்தார் கோயிலினுள் அடைந்தவரைக் கொண்டு புக்கார்.
(திருநாவு-புரா-68)

திருநீறு, மாந்தரின் ஆணவ மலமாகிய மனஇருள் போக்குவது. அங்ஙனம் போக்குவதற்கு வாயிலாக அமைவது காலைப் புலர்வாகும். புற இருளைச் சூரியன் போக்கும் நேரமாகிய காலையில் எழுந்து, சிவபெருமானை வணங்கும் வழிபாடே சிறப்பாக அமையும்.

இவ்வாறு திலகவதியார் காட்டிய வழியில், திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டு புரிந்து நம் நாட்டுக் கோயில் தோறும் தடையின்றி வழிபாடு நடைபெறுமாறு செய்தார். ஆகவே, திலகவதியாரின் கருத்துத்தான் திருநாவுக்கரசர் வழியாக மக்களிடம் பரவி உய்வித்து வருகிறது.

"திலகவதியார் வழிகாட்டிய திருநாவுக்கரசரின் திருத்தொண்டு வாழ்க"

# சங்கடங்கள் நீக்கும் சரபேஸ்வரர்

சிவபெருமான் அன்பர்களுக்கு அருள மேற்கொண்ட வடிவங்களில் முதன்மை பெற்றவை சந்திரசேகரர், ரிஷபாரூடர், நடராசர், பிட்சாடனர், அர்த்தநாரீஸ்வரர், நீலகண்டர், சோமஸ்கந்தர், தட்சிணா மூர்த்தி, லிங்கோத்பவர் ஆகிய 64 மூர்த்தங்கள் ஆகும். இதனை வடமொழியில் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் என்பர். அவற்றுள் ஒரு மூர்த்தமே சரபேஸ்வரர், சரபேஸ்வரரை சிம்மஹக்னர் என்றும் கூறுவர்.



சென்னை கோயம்பேட்டில், குறுங்காலீஸ்வரர் கோயில் கோபுரம்; கிழக்கு நோக்கிய வைகுண்ட வாசப் பெருமாள் கோபுரம்; லவகுச தீர்த்தம் ஆகியவற்றுக்கு இடையில் பதினாறு கால் மண்டபம் அமைந்துள்ளது. இதில் பார்ப்பவர்களின் பார்வை பரவசம் அடைந்திடும் நிலையில் கண்ணைக் கவரும் வண்ணம், கருங்கல் தூணில் இடம்பெற்றுள்ள சிற்பங்கள் யாவும் அழகுடையனவாகத் திகழ்கின்றன. அம்மண்டபத்தில் உள்ள ஓர் தூணில் மேற்கு திசை நோக்கிய நிலையில் சரபேஸ்வரர் வடிவம் அமைந்துள்ளது.

சரபேஸ்வர மூர்த்தியின் அருமை பெருமைகளை உணர்த்த சமயச் சான்றோர்கள் அமைத்த இந்த கலையழகுமிக்க சிற்பத்திறனைக் கண்ணாரக் கண்டு ரசித்தால் மட்டும் போதுமா? என எண்ணி கரங்கள் குவித்து ஐம்புலன்களும் ஒடுங்குமாறு மலரிட்டு வழிபடும்படிச் செய்தனர். சரபத் திருவுருவத்தின் அளப்பரிய சக்தியினை வியந்து போற்ற, எண்ணிலாப் பிறவிகள் வேண்டும். இத்திருவுருவத்தின் பெருமையினைப் படித்தவர்களும், படிப்பறியா பாமரர்களும் உணர்ந்தனர். வழிபாடு செய்தனர். அந்த இறையருளால் மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ்கின்றனர்.

வாரத்தின் விடுமுறை நாளாகத் திகழ்வது ஞாயிற்றுக்கிழமை. ஞாயிறன்று இராகுகாலம் மாலை 4.30 மணி முதல் 6.00 மணிவரை ஆகும் இராகு கால நேரத்தில் இங்கே கோயில் முன் கூடும் கூட்டம் கடலலைபோல் இருக்கும். இவ்வடியார்கள் கூட்டத்தில் மதம். இனம், மொழி, முதலான வேறுபாடு இல்லாமல் யாவரும் ஒன்றாய் நின்று வழிபாடு செய்வர். இவ்வழிபாடு மக்களிடத்தில் காணும் சமய ஒற்றுமையை வெளிக்காட்டுகிறது. இவ்வழிபாடு, இவ்வூரிலுள்ள மக்களால் விரும்பி போற்றிக் கொண்டாடப்படும் சிறந்த வழிபாடாகும். ஞாயிறு மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை சரப வழிபாட்டிற்குரியதான காலத்தில் நடைபெறும் அபிடேகம் முதல் அலங்காரம், தீபாராதனை வரை அடியவர்களின் மனம் சரபத்திருமூர்த்தத்தில் லயித்திருப்பதைக் காண முடிகிறது.இவ்வழிபாட்டிற்கு மக்கள் தம்மிடம் உள்ள பூசைப் பொருள்களை அகமகிழ்ந்தளிப்பர். மேலும் மக்களே வழிபாடு நடத்துவதும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

சரபேஸ்வர வழிபாட்டின் பலன்

சரபேஸ்வரரை மனதாலும், உடலாலும் வணங்கிட நாம் அடையும் பலன்கள் எண்ணிட முடியாது. சரபரின் சக்திகளை இருவகைப்படுத்தலாம். 1. ஆக்கல் சக்தி, 2. அழித்தல் சக்தி.

ஆக்கல் சக்தி என்பது உயிர்கள் செய்யும் நல்வினைக்குத்தக்க அருள்புரிதலைக் குறிக்கும்.

அழித்தல் சக்தி என்பது உயிர்களை அழிப்பதல்ல, உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள தீவினைகள், தீய சக்திகள் போன்றவற்றை அழித்து, நன்னிலைப்படுத்தி அருள்புரிவது.

பில்லி, சூனியம், ஏவல், பூதப்பிரேதம், பைசாச

பயங்கள் முதலான செய்வினைகள் யாவும் முழுதும் அழித்தொழிக்கும். மேற்கூறிய தீமைகளைச் செய்பவனையே திருப்பி அழிக்கும் வல்லமை பெற்றது.

தீ விபத்து விஷக்கடிகள், மருத்துவத்தால் குணப்படுத்த முடியாத உடல் நோய்கள் மனோவியாதிகள் முதலியன சரபரின் வழிபாட்டினால் முற்றிலும் நீங்கும் ஊழ்வினை காரணமாக தீராத நோய்களையும் தீர்த்துவைக்கும் தீர்த்தனாக சரபேஸ்பரன் விளங்குகிறான். இயற்கைச் சக்தியும் செயற்கைச் சக்தியும் சரபரின் திருவருள் இருப்பின் எவையும் நெருங்காது என்பது உறுதி.

இரண்ய கசிபு, தான் எல்லா நிலைகளிலும் உயர்ந்துள்ளதாக நினைந்து ஆணவச் செருக்குடன் வாழ்ந்து வந்தான், தானே தெய்வத்திற்கு நிகரானவன் என்று கூறியும் வந்தான். ''நானே தெய்வம்'' நானே பரம்பொருள்'' என்று மக்கள் கூறும்படி ஆட்சி செய்தான். தெய்வத்தையும், தன்னை தெய்வமாகக் கருதி வழிபடாதவரையும் நிந்தனை செய்து வந்தான். அவன் மகனான பிரகலாதன் ஸ்ரீமத் நாராயணனையே பக்திச் சிரத்தையுடன் தொழுதுவந்தான்.

இரண்யகசிபு மகன் பிரகலாதனை நோக்கி, உன் கடவுளை என் முன் வரச்சொல் என்றான். உடனே பிரகலாதன் ''ஸ்ரீ நாராயணா நாராயணா நாராயணா'' என்று மனமுருகி அழைத்தான். அன்பனின் குறைதீர்க்கும் பொருட்டுத் தூணைப் பிளந்தபடி வெளிவந்த நரசிம்மர் இரண்யகசிபுவின் நெஞ்சைப் பிளந்து, குடலை உருவி, உதிரத்தைக் குடித்து அவனை அழித்தார். நரசிம்மமூர்த்தி இரண்யகசிபுவை பகலும் இரவுமற்ற மாலை நேரத்தில், உள்ளும் வெளியுமற்ற வாசல் நிலையில் அமர்ந்து, ஆயுதங்கள்இல்லாமல் தம்முடைய கூரிய நகங்களாலேயே) அழித்தார். அவனை அழித்ததனால் உக்கிரம் அடங்காமல் அசுர இரத்தம் தலைக்கேறியது.

பிரம்மன் முதலான தேவர்கள் யாவரும் நடுங்கும்படி அழிவுச் சக்தியாக ஆர்ப்பரித்து நரசிம்மம் நின்றது. இதனைக் கண்ட தேவர்கள் பயந்துபோய். குற்றங்களை நீக்கும் குணசேகரனாம் அம்மையப்பன் திருவடிகளைச் சரணடைந்து அடைக்கலம் புகுந்தனர். பூத கணங்களின் தலைவனும், தன் வடிவொத்தவனும் ஆகிய அகோர வீரபத்திரரை அனுப்பி வைக்கிறேன் என்று கூறி அனுப்பினார்.

### சரபேஸ்வரரின் வடிவம்

நரசிம்மத்தின் ஆவேசத்தினை, வீரபத்திரராலும் தணிக்க முடியவில்லை.. உடனே வீரபத்திரர். சரபப் பறவையாக, மனித உடலும், மிருகமும் கலந்த ஒரு மகா பயங்கர வடிவமெடுக்கிறார். அவ்வடிவங் கொண்ட இறைவனை சரபேஸ்வரர் (சரப+ஈஸ்வரர்= சரபேஸ்வர்) என்பர் எட்டுக்கால்களும், இரண்டு முகங்களும், நான்கு கைகளும், கூர்மையான நகங்களும், இருபுறத்திலும் இறக்கைகளும், நரி வாலும் , கருடனைப் போன்ற மூக்கும், காளியைப் போன்று தெத்துப்பல்லும் கொண்டு தோன்றிய பறவை வடிவமே சரபேஸ்வர வடிவம் ஆகும்.

இரு சிறகுகளும் இரு சக்திகளைக் கொண்டன.ஒரு சிறகு பத்திரகாளி (ப்ரத்தியங்கரா) பிறிதொரு சிறகு துர்க்கை (சூலினி) இச்சரபப் பறவை வடிவில் சக்தியாய் மாறிச் சிவபெருமான் பறந்து வரும் போது சரபத்திருவுருவில் நிழல்பட்டவுடனேயே. நரசிம்மரின் உக்கிரம் அடங்கி ஒடுங்கியது.

### பதினெட்டு நாட்களா, பதினெட்டு சுலோகங்களா?

நரசிம்மத்தின் சினத்தினைத் தணிக்க, சரபர் 18 நாட்கள் பல்வேறு வகைகளில் முயற்சி செய்து ஒடுக்கினார். அதில் ஒரு வடிவம் ''நரசிம்மரை மார்புடன் தழுவ இழுக்கும் கோலம் ஆகும்'' இக்கோல வடிவமே கோயம்பேடு ஸ்ரீ குசலவபுஸ்வர் கோயிலின் முன்னுள்ள பதினாறு கால் மண்டபத்தூணில் அமைந்துள்ளது.

சிவனின் வடிவமாகிய சரபேஸ்வரர் முடிவில் நரசிம்மத்தின் பாதங்களை இருபுறமும் பிடித்து இரண்டாகக் கிழித்துவிட முயலுகையில் தான் எனும் தன்னுணர்வு திரும்பினார் மகாவிஷ்ணு. அப்போது அவர் 18 சுலோகங்களால் தன் சினம் தணியச் செய்த சரபேஸ்வரரைத் துதிக்கிறார். சரப அஷ்டோத் திரமானது நரசிம்மர் வாய்வழித் தோன்றியதே.

இந்த அதர்வண வேத சரப மந்திரம் எல்லா பாபங்களையும் போக்கி, காத்து அருள்புரியவல்லது என்று கூறப்படுகிறது.

காஞ்சிப்புராணம் சிவபராக்ரமம், போன்ற நூல்களில் சரபேஸ்வரர் பற்றிய விளக்கத்தைக் கண்டுணர்ந்து தெளியலாம்.*

# ஸ்ரீ அனந்த பத்மநாப ஸ்வாமி திருக்கோயில்

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரில் அடையாறு பகுதியில் காந்தி நகர் இரண்டாவது மெயின் ரோட்டில், அடையார் மேம்பாலத்திற்கு (சிக்னல்) வடக்கில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

**கருவறையிலுள்ள மூலவர் திருக்கோலமும் திருநாமமும்**

கேரளத்தில் உள்ள மிகப் பழமையான திருவனந்தபுரம் அனந்த பத்மநாப சுவாமிகோயிலில் அமைந்துள்ளது போல் ஆதிஷேசன் மேல் பள்ளிகொண்ட திருக்கோலத்துடன் ஸ்ரீ அனந்த பத்மநாப சுவாமி வலது கையால் சிவலிங்கத்தைத் தொட்டவாறு ஸ்ரீதேவி, பூதேவியருடன் நாபிக் கமலத்தில் உதித்த பிரம்மாவுடனும், கௌண்டிண்ய மஹரிஷி, திவாகர மஹரிஷிகளுடனும் பெருமாள் காட்சியளிக்கிறார்.

பின்பக்கச் சுவரில் முப்பத்து முக்கோடி தேவர்கள் அமைக்கப்பட்டுள்ளனர் பெருமாளின் அனந்த போக சயனத்தைக் கருவறையின் மூன்று வாசல் வழியாக முகம்,



நாபி, பாதம் என்ற வகையில் தரிசனம் செய்திடல் சிறப்பு.

சிருங்கேரி ஜகத்குரு அபிநவ வித்யா தீர்த்தர் திருக்கரங்களால் காஞ்சி ஸ்ரீ சந்திரசேகரேந்திர மஹாஸ்வாமிகளால் வழங்கப்பெற்ற யந்திரத் துடன் இங்கே பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது.

பெருமாள் சயனித்துள்ள ஸ்ரீவிமானம் இந்திர விமானம். மூன்று கால பூஜை செய்யப்படுகிறது.

**பூஜை கால விபரம்**

| | | |
|---|---|---|
| காலை 6.00 மணிக்கு | - | நடைதிறப்பு, |
| காலை 7.00 மணிக்கு | - | ப்ராதகால பூஜை |
| காலை 8.00மணிக்கு | - | மஹா தீபாராதனை |
| மதியம் 12.00 மணிக்கு | - | உச்சிகால நடைபெறும் |
| மாலை 6.30 மணிக்கு | - | சாயரட்சை பூஜை |
| மாலை 7.15.மணிக்கு | - | தீர்த்த ப்ரஸாதம் வழங்குதலும் |
| இரவு9.00 மணிக்கு | - | நடை சார்த்துதலுடன் பூசை முடிவுறும் |

நிர்வாக சூழ்நிலைகளுக்கு ஏற்ப இக்காலங்களில் மாறுதல் ஏற்படலாம், சனி, ஞாயிறு மற்றும் விசேஷ தினங்களில் பகல் 12 மணிவரை கோயில் திறந்து இருக்கும்.

அபிஷேகம்: வெள்ளிக்கிழமை, பௌர் ணமி நாட்களில் மூலவர் அனந்தபத்மநாப சுவாமிக்கும் நித்தியப்படி ஸ்ரீசிவன் மற்றும் பரிவார சன்னதிகளான ஸ்ரீசுதர்ஸனர், ஸ்ரீகருடன், ஸ்ரீலட்சுமி நரசிம்மர், ஸ்ரீ துர்க்கை, ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ விநாயகர், ஸ்ரீநவக்கிரகம் ஆகியவற்றுக்கும் அபிஷேகம் செய்விக்கப் படுகிறது.



1. காலை, மாலை இருவேளைகளிலும் அனைத்து சன்னதிகளிலும் கட்டணம் செலுத்தி சஹஸ்ரநாம அர்ச்சனை செய்யலாம்(முன்பதிவு)

2. அஷ்டோத்ர அர்ச்சனை காலை 8 முதல் 11மணிவரை, மாலை 5 முதல் 8 மணிவரை.

விசேஷமாக ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்குச் சனிக்கிழமை மாலை சஹஸ்ரநாம அர்ச்சனை, ஸ்ரீ இஷ்டசித்தி விநாயகருக்கு சங்கட ஹர சதுர்த்தியன்று மாலை சஹஸ்ரநாம அர்ச்சனை செய்விக்கப்படுகிறது.

பிரதிவருடம்: ஸ்ரீ ஹனுமத் ஜெயந்தி, ஸ்ரீ நரஸிம்ம ஜெயந்தி, ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி, ஸ்ரீ குருபகவான் பெயர்ச்சி ஆகியவற்றை ஒட்டியும், 2 1/2 வருடங்களுக்கு ஒருமுறை ஏற்படும் சனிபகவான் பெயர்ச்சியை ஒட்டியும் இலட்சார்ச்சனை விழா செய்யப்படுகிறது.

பிரதிமாதம் திருவோணம் நட்சத்திரத்தன்று மாலை ஸ்ரீ பத்மநாபருக்கு திருத்தேர் உற்சவமும், புதிதாக நிர்மானம் செய்யப் பட்டுள்ள தங்கத்தேர் உற்சவமும் செய்யப் படுகின்றன.

பிரதி மாதமும் உபயதாரர் வேண்டுகோளின் பேரில் திருக்கல்யாண உற்சவமும் நடை பெறுகிறது. பிரதோஷ பூஜை(அரசமரத்தடி மூலஸ்தானத்தில்) நடைபெறுகிறது.

**விஷேச ஹோமங்கள்:** பிரதி மாதமும் உபயதாரர்களுடைய வேண்டுகோளின் பேரில் ஸ்ரீ கணபதி ஹோமம், ஸ்ரீ சுதர்ஸன ஹோமம், ஸ்ரீ லட்சுமி நரசிம்ம ஹோமம், ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி ஹோமம், ஸ்ரீம்ருத்யுஞ்ஜய ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம் ஆகியவை



நடைபெறுகின்றன. (அவ்வப்போது சமஸ்டி உபயதாரர் முறையிலும் நடைபெறும்) (முன்பதிவு)

**கருடராட்ச கயிறு:** இக்கோயில் தனிச் சன்னதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கருட பகவானுக்கு மாதம் ஒரு முறை சிறப்பு பூஜை செய்து கருட மந்திரம் ஜெபிக்கப்பட்டு கருட ரட்சை சிவப்பு கயிறு பக்தர்கள் அனைவருக்கும் குறைந்த கட்டணத்துடன்(ரூ5 பிரசாதமாக வழங்கப்படும்.

இதனால் பலன் அடைந்தவர்கள் ஏராளமான பேர்களாவர், இது தோஷ நிவாரணமாக வழங்கப்படுகிறது.

முக்கிய நிகழ்ச்சிகள்

1. ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி
2. ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி
3. ஸ்ரீ அனந்த வ்ரதம் ஓணம் பண்டிகை
4. ஆவணி அவிட்டம் (மஹா சுவாமி அனந்த மண்டபத்தில் நடைபெறும்)
5. சீதா கல்யாணம்(மஹா சுவாமி அனந்த மண்டபத்தில் நடைபெறும்
6. ராதா கல்யாணம்(மஹா சுவாமி அனந்த மண்டபத்தில் நடைபெறும்)
7. ஹனுமத் ஜெயந்தி
8. குத்துவிளக்கு பூஜை(ஆடி, தை)
9. மாசிமகம் ப்ரம்மோற்சவம்
10. புரட்டாசி மாதம் நவராத்திரி (ஸ்ரீ துர்கை)
11. மகாசிவராத்திரி
12. ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி - கருடசேவை
13. புரட்டாசி மாதம் 4 வது சனிக்கிழமை கருடசேவை
14. ஸ்ரீ ராமநவமி மற்றும் இதர பண்டிகை விசேஷங்களும் நடைபெறுகின்றன.



# உலகம் ஒளிபெற

## அப்பர் அடிகள் என்னும் அருந்தவத் திருநாவுக்கரசர்



திருநாவுக்கரசு நாயனார் பண்ருட்டிக்கு அருகிலுள்ள திருவாய்மூர் என்னும் தலத்தில் செல்வம் நிறைந்த வேளாளர் குடியிலே தோன்றியவர். இவருடைய இயற்பெயர் மருள் நீக்கியார் என்பதாகும். தாய் தந்தையர் புகழனார்-மாதினியார். உடன் பிறந்தவர் திலகவதியார். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய மருள் நீக்கியார் ஜைன அறிஞர்களோடு கொண்டிருந்த தொடர்பினால் சமணம் சார்ந்தார். அங்குத் தவஒழுக்கத்தால் மேன்மை பெற்றுத் தருமசேனர் என்னும் பெயர் சூடிப் பெருமையுடன் விளங்கினார்.

அவர் சமணம் சார்ந்ததால், வருத்தமுற்ற சகோதரி திலகவதியார் திருவதிகை வந்து வீரட்டானர் ஆலயத்தில் சேவை புரிந்து வந்தார். சிவபெருமானிடம் தம்பியைத் தடுத்து ஆட்கொள்ளுமாறு வேண்டினார். வேண்டுதல் பலித்தது இறைவன் சூலை நோயைக் கொடுத்து அவரை ஆட்கொண்டான். அவர் சைவ சமயம் திரும்பினார்.

அதைக் கண்டு சமணர்கள் கோபித்தனர். அரசனிடம் கூறி அவரைச் சுண்ணாம்புக் காளவாயில் வைத்துச் சுட்டும். நஞ்சு அருந்தச் செய்தும், யானையை ஏவி இடறச் செய்தும் துன்புறுத்தினர். அவற்றால் அடிகளாருக்கு எத்துன்பமும் விளையவில்லை. இறுதியில் கல்லோடு இரும்புச் சங்கிலியால் பிணைத்துக் கடலில் வீசினர். இறைவன் அந்தக் கல்லே தெப்பமாக மிதக்கச் செய்தான். அவர் பாதிரிப்புலியூரில் கரையேறி இறைவனை வழிபட்டார். இன்னும் அநேக அற்புதங்கள் அவர் வாழ்வில் நடைபெற்றன.

இறைவன் மீது கொண்ட அன்பால் தலங்கள்தோறும் சென்று உழவாரப்பணியுடன் பாமாலை சூட்டிப் பதிகங்களைப் பாடினார். பாட்டின் நயத்தால் நாவுக்கரசரானார்.

தலங்கள்தோறும் சென்று பதிகம் பாடிய அவர். கயிலை மலையானைக் காணும் ஆவலால் இமயம் வரை யாத்திரை புரிந்தார். மலைமீது ஏறும் போது இறைவன் அவரிடம் கயிலை நாதனைக் காணுதல் அரிது என்றார். நாவுக்கரசர் மறுத்துப் பனியிலும் காற்றிலும் பயணத்தைத் தொடர்ந்தார். இறைவன் அவரை ஒரு குளத்தில் மூழ்குக என்றார். அவ்வாறு மூழ்கி எழுந்தபோது அடிகளார் தென்னாட்டில் திருவையாற்றில் இருப்பதை உணர்ந்தார். அவ் வேளையில் கண்டறியாதன கண்டேன் என்று மகுடமிட்ட பாடலை ஓதினார். சித்திரை சதய நாளில் இறைவன் அவரை ஆட்கொண்டு தன்னுடன் இணைத்துக் கொண்டார். அந்நாளினை அவருடைய திருநட்சத்திரமாகக் கொண்டாடி வருகிறோம். பெரியபுராணம், நால்வர் நான்மணி மாலை, திருநாவுக்கரசர் ஏகாதச மாலை முதலிய நூல்கள் இவருடைய பெருமைகளை விரிவாகக் கூறுகின்றன.

சில தலங்களில் திருவீதிகளைத் தூய்மையாக வைத்திருக்க, உழவாரப் பணி செய்யவேண்டும் என்பதை உணர்த்த பெருந்திருவிழாவிற்கு முன்னர் அப்பர் அடிகளை வீதியுலா வரச் செய்யும் வழக்கம் உள்ளது.

திருப்புகலூரில் சித்திரை சதயத்தைக் கடைநாளாகக் கொண்டு பத்து நாட்கள் பெருந்திருவிழா கொண்டாடப்படுகிறது. ஆலயத்தைச் சுற்றியுள்ள அகழியில் தெப்போற்சவம் நடைபெறுகிறது. சென்னையில் கோடம்பாக்கம் மேம்பாலத்திற்கு அருகில் உள்ள செளந்திர விநாயகர் ஆலயத்திலும் அப்பர்விழா ஐதிக சிறப்புடன் நடைபெறுகிறது.

உலகமானது நலம் பெறவும், ஆன்மிக வாழ்வில் ஒளிபெறவும் அருளாளர்கள் வாழையடி வாழையெனத் தோன்றித் தமது செயற்கரிய செய்கைகளால் அதை மேன்மைப் படுத்துகின்றனர். அவ்வழி வந்தவர்களில், சித்திரைத் திருவாதிரையில் உலகம் உய்ய உதித்த உடையவர் ஸ்ரீ ராமானுஜரையும், சித்திரை சதய நாளில் அருட்சோதியில் கலந்து மேன்மை பெற்ற அப்பர் அடிகளையும் இங்கு சிந்திக்கலாம்.

## எம்பெருமானார் ஸ்ரீமத் இராமானுஜர்



ஸ்ரீவைஷ்ணவர்களால் எம்பெருமானார் என்று கொண்டாடப்படும் அருளாளர் ஸ்ரீமத்ராமானுஜர். சென்னை - காஞ்சிபுரம் சாலையிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் கேசவ சோமயாஜி-காந்திமதி தம்பதியருக்கு மகனாகப் பிங்கள ஆண்டு சித்திரை மாதம் சுக்கிலபட்சம், பஞ்சமி திதி வியாழக்கிழமை, திருவாதிரை நட்சத்திரத்தில் தோன்றினார்.

சிறுவயதிலேயே இறைநாட்டம் கொண்ட இவர். காஞ்சிபுரம் சென்று பேரருளாளனாகிய வரதராசர் சந்நிதியில் கைங்கர்யம் செய்துவந்தார். தினமும் தீர்த்தம் எடுத்துச் சென்று திருவாராதனத்திற்கு அளிப்பது வழக்கம். அந்நாளில் ஸ்ரீரங்கத்தில் வைஷ்ணவ ஆசார்யனாக வீற்றிருந்தவர் ஸ்ரீ ஆளவந்தார். அவர் கலியுகத்தில் உத்தமமான குணங்களைக் கொண்டவரும் கைங்கர்ய பரராக இருப்பவருமான ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் தேடும்படி அனுப்பியவர்களில் சிலர் காஞ்சிக்கு வந்து உத்தம குணங்களைக் கொண்ட இராமானுஜரைத் தரிசித்தனர். அதை ஆளவந்தாரிடம் தெரிவித்தனர். ஆளவந்தார் இராமானுஜரை ஸ்ரீரங்கத்திற்கு அழைத்து வரும்படிக் கூறினார்.

அதன்படியே இராமானுஜர் திருவரங்கத்திற்குப் பயணம் மேற்கொண்டார். இடையில் மதுராந்தகம் ஸ்ரீராமர் கோயிலில் மகிழ மரத்தடியில் அவருக்குப் பஞ்ச சமஸ் காரம் செய்து வைக் கப்பட்டது. விரைந்து பயணம் செய்து திருவரங்கத்தை அடைந்தார் என்றாலும், அதற்குள் ஸ்ரீ ஆளவந்தார் பரமபதம் அடைந்து விட்டார்.

ஸ்ரீரங்கத்திலிருந்தவாறே ஸ்ரீராமானுஜர் சமயப்பணிகளை மேற்கொண்டார். ஆளவந்தாரின் சீடர் திருக்கோஷ்டியூர் நம்பி.

# உதித்தவர்கள்

அவரிடம் மந்திர உபதேசம் பெறச்சென்றார் இராமானுஜர். அவர் எளிதில் உபதேசம் செய்யவில்லை. அப்புறம் பார்க்கலாம் என்று காலம் கடத்தினார். பதினேழுமுறை பொறுமையுடன் வந்து தன்னைச்சந்தித்த ராமானுஜரைக் கண்டு மகிழ்ந்த அவர் பதினெட்டாவது முறை மந்திரம் உபதேசம் செய்வதாக ஒப்புக் கொண்டார்.

இந்த மந்திரம் ஓராண் வழியாக (ஒருவருக்கு ஒருவர் மட்டுமே உபதேசித்து) வருவது இதைப் பிறருக்கு வெளியிட்டால் உமக்கு நரகம் கிடைக்கும் என்றார். அப்படியே ஆகட்டும் என்றார் இராமானுஜர். திருக்கோஷ்டியூர் நம்பி அவருக்கு ஓம் நமோ நாராயணா என்ற எட்டெழுத்து மந்திரத்தை நுண்பொருளுடன் அளித்தார். அதைக் கேட்டதும் அவருக்குள் பெரிய மகிழ்ச்சி உண்டாயிற்று. இந்த ஒப்பற்ற மந்திர விளக்கத்தை நான் மட்டும் வைத்திருப்பதால், ஏது பயன் நான் நரகிற்குப்போனாலும் பரவாயில்லை. இதனை உலகிற்கு அறிவிப்பேன் என்று எண்ணினார்.

அதன்படியே மறுநாள் திருக்கோஷ்டியூர் ஆலய விமானத்தின் மீது ஏறி எல்லோரையும் அழைத்து அம்மந்திர விளக்கத்தைக் கூறினார். எல்லோரும் அவரைப் போற்றிக் கொண்டாடினர்.

ஆசாரியார் கோஷ்டியூர் நம்பி, முதலில் சினந்தாலும், இராமானுசரின் பரந்த நல்லெண்ணத்தைக் கண்டு வியந்தார். அங்கிருந்தவர்களிடம் இதுவரை ரகசியமாக வழிவழியாகப் போற்றப்பட்டு வந்த இந்த பரம வைதீக சித்தாந்தம் இனி இவர் பெயரால் எம்பெருமானார் தரிசனம் என்று வழங்கப்படட்டும் என்று கூறி ஆசி அளித்தார்.

இப்படி உலக மக்கள் வாழ உபதேசித்த இராமானுசர் கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரை பயணம் செய்து வைணவத்தைப் பரப்பினார். வேதாந்த சூத்திரங்களுக்குப் பாஷ்யம் வரைந்தார். அதனால் பாஷ்யக்காரரர் என்று அழைக்கப்படுகிறார். ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் விழாக்களுக்கான வரைமுறைகளைச் செய்து சிறப்பாக நடக்கும்படி செய்ததும் அவரே, தம் ஒப்பற்ற உழைப்பால் எண்ணற்றவர்களை வைஷ்ணவ சமயத்தை தழுவும்படிச் செய்தார்.

எம்பெருமானாரை யதிராசர், பாஷ்யக்காரர், இளையாழ்வார் திருப்பாவை ஜீயர் எனப் பலவாறு அழைக்கின்றனர். அவர் வாழும் காலத்திலேயே அவருடைய திருமேனியை விக்கிரமாகச் செய்து ஆலயங்களில் வைத்து வழிபடும் வழக்கம் தோன்றிவிட்டது.

இப்படி அமைந்த திருமேனிகளில் மூன்று திருமேனிகள் தனிச்சிறப்புப் பெற்றவை களாகும். இவற்றைத் **தானான திருமேனி, தமருகந்த திருமேனி, தாமுகந்த திருமேனி** என்று அழைக்கின்றனர். தாமுகந்த திருமேனி மேல்கோட்டையிலும், தானான திருமேனி திருவரங்கத்திலும் உள்ளன. தமருகந்த திருமேனி திருப்பெரும்புதூர் ஆலயத்தில் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளது. அந்த அற்புதத் திருமேனியே இங்குப் படத்தில் காண்கிறோம்.

முதலியாண்டானின் புதல்வர் காந்தாடை யாண்டான் என்பவர் இராமானுஜரிடம் அவருடைய திருமேனிச் சிலையை வைத்து வழிபட உத்தரவு கேட்டார்.உடையவர் அப்படியே ஆகட்டும் என்றார்.

நல்ல நாள் பார்த்து சிலையை செய்து உடையவரிடம் காட்டினர். உடையவர் அதை ஆரத் தழுவினார். அந்தக் காட்சியை உடம்பு மட்டுமா தழுவியது. அவர் உயிரும் தழுவி அதில் நிலைபெற்றது என்று கூறுவர். திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள இத்திருமேனிக்குச் சித்திரை திருவாதிரையை ஒட்டிப் பெருந் திருவிழாக்கள் கொண்டாடப் படுகின்றது. இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைகின்றனர்.




---

**-பூசை.**

**ச. ஆட்சிலிங்கம்**

# பசு



உலகில் உள்ள விளங்குகளில் மனிதனுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பது 'பசு.' பசுவிற்குப் பல பெயர்கள் இருப்பினும் அவைகளில் முக்கியமானது ஆனினம் என்பதாகும். ''அமரர் கண் முடியு மறுவகையானும்'' என்ற சூத்திரவாயிலாய் வாழ்த்தப்படும் பொருள் அறுவகை என விளக்கி அவற்றுள் பசுவை ஒன்றென எடுத்து வாழ்த்தியிருக்கிறார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

'ஆனினம் வாழ்க என்றது ஏன்?

"தங்குமகில யோனிகட்குமேலாம்
பெருமை தகைமையன
பொங்குபுனித தீர்த்தங்க ளெல்லா
மென்றும் பொருந்துவன
துங்கவமரர் திருமுனிவர்கணங்கள்
சூழ்ந்து பிரியாத
வங்கமனைத்துந் தரமுடைய
வல்லவோநல் லானினங்கள்''
(சண்டேசுர நாயனார் புராணம்)

என்கிறார் சேக்கிழார்.

பசுவின் கொம்பினடியில் பிரமவிஷ்ணுக்கள் வசிக்கிறார்கள், கொம்பின் நுனியில் கோதாவரி முதலிய தீர்த்தங்களும், சகலசரா சரங்களும் பொருந்தியிருக்கிறது. தலையில் பரம சிவனும், நடுநெற்றியில் பார்வதியாரும், நாசியில் முருகவேளும், உண்ணாசியில் திக்குப்பாலகர்களும், காதுகளில் அசுவினித் தேவர்களும், கண்களில் சூரிய சந்திரர்களும், பற்களில் வாயுவும், நாவில் வருணனும், உளங்காரத்திற்கிடமாகிய நெஞ்சில் சரஸ்வதியும், இருதயத்தில் யமனும், மார்பில் காந்தருவனும், உதட்டில் காலை சந்தி, மாலை சந்தி தேவதைகளும், கழுத்தில் இந்திரனும், இமையில் சூரியனும் மார்பில் சாத்தியரும், கால்களில் வாயுவும், முழந்தாளில் அசுவினி தேவர்களும், குரத்து நுனியில் நாகலோகத்தாரும், குரத்து நடுவில் காந்தருவரும், மேற்குரத்தில் தேவமாதர்களும், முதுகில் உருத்திரரும், சந்துகளில் வசுக்களும், அரைப்பலகையில் பிதிர் தேவர்களும், பக்கத்தில் சப்த மாதர்களும், குதத்தில் லெட்சுமியும், அடிவாலில் தேவர்களும், வால் மயிரினில் சூரியனொளி யும், கோசலத்தில் கங்கையும், கோமயத்தில் யமுனையும், உரோமத்தில் யாதவர்களும், வயிற்றில் பூதேவியும், மார்பகத்தில் சமுத்திரமும், வயிற்றில் காருகபத்தியமும், இருதயத்தில் தக்கினாக்கினியும், முகத்தில் ஆகவனீயமும்,

**(க. சுகுமாரன், மன்னார்குடி)**

எலும்பிலும் சுக்கிலத்திலும் யாகாதிகளும், ஏனைய அவயவங்களில் கற்புடை மகளிரும் வாழ்கிறார்கள். ஆனினங்களின் அவயவங்கள் அனைத்திலும் சகல தீர்த்தங்களும், தேவர்களும், முனிவர்களும் இருத்தலால் எல்லா யோனிகளிலும் இவை சிறந்தனவெனக் கொள்ளப்பட்டன.

பசுக்கள் இம்மை மறுமை இரண்டிலும் பயனைத்தரும். இப்பசுக்கள் -நந்தை -பத்திரை - சுரபி- சுசிலை- சுமனை என ஐந்தாகும் அவைகளில் நந்தை கருமை கலந்த பொன் னிறமும், பத்தரை கருநிறமும், சுரபி வெண்ணி றமும் சுசிலை புகை நிறமும், சுமனை செந்நி றமும் உடையன. இப்பசுக்கள் சிவபெருமானது சந்நிதிக்கண் இடபதேவரின் பக்கத்திலிருக்கின்றன. ஆகவே ஆனினம் என்பது ஆணும் அதன் இனமாகிய விடையும் என்பது பொருள்தரும். இவற்றைச் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு பூமியில் பிறக்கச் செய்தலால் அவை ஆதியிலே பாற்கடலின் வழியாகத் தோன்றின பின்னர் பூமியில் விளங்கின. இப்பசுக்களின் சிறப்பு சர்வோத்தமம் என்னும் சிவாகமத்தின் உபதேசம் ஐந்தனுள் ஒன்றாகிய சிவதரு மோத்திரத்தில் கோபுரவியலில் விவரிக்கப் பட்டுள்ளது. லௌகிக வைதீக கருமங்களுக்கு இன்றியமையாப் பொருட்களாகி இருப்பவை பசுக்கள் தரும் பால், தயிர், நெய் கோசலம், கோமயம் என்பவைகளே. சித்தமருந்துகளில் லேகியம், கிருதம் முதலானவற்றைப் பசுக்கள் தரும் பால் நெய் முதலியவை இன்றித் தயாரிக்கமுடியாது.

நேர்வாளத்தை சுத்தி செய்யவும், விஷங்களை போக்கவும், விஷ பேதிக்கு ஆதாரமாய் உள்ள விஷக் காற்றினை ஒழிக்கவும், விஷ ஜந்துக்கள் அணுகாதிருக்கவும் பிறவற்றைச் சுத்தமாக்கும் பொருளாகவும் மதிக்கப்பட்டு வருவது கோமயம் எனும் பசுஞ்சாணமே, புறத்திலுள்ள எவ்வித துர்க்கந்தங்களையும் எவ்வித அசுசிகளையும் நீக்குவது கோமயம் பசுஞ்சாணமே.

மகோதரம் முதலிய நோய்களை நீக்கவும், பூச்சிபுழு முதலியவை அணுகாதிருக்கவும் உபயோகமாயிருப்பது கோசலமே. சில மருந்துக்களுக்கு அனுபானமாக பசுக்கள் தரும் பால் தயிர் வெண்ணை அவசியம். தேக ஆரோக்கியத்திற்கு பால், தயிர் வெண்ணெயையே மிகச் சிறந்தனவாகக் கொள்கின்றனர். ஆயுர்வேதத்திலும் பற்பல மருந்துகளைப் பசுஞ்சாண வறட்டி கொண்டு புடமிடுவதோடு, அவ்வறட்டி கொண்டு சமைத்த உணவுகள் மகா புனித மாயும், நோய் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கின்றன.

பசுவைப் போற்றுவோம்
பயன்பெறுவோம்.





திருவலஞ்சுழி அருள்மிகு கபர்தீஸ்வரசுவாமி (வெள்ளை பிள்ளையார்) திருக்கோயிலில் 17.3.2008 அன்று நடைபெற்ற கும்பாபிசேக பெருவிழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், திருப்பனந்தாள் காசிமடாதிபதி ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தம்பிரான், அவர்கள் அறங்காவலர் குழு தலைவர் திரு.டி.எஸ். இராஜகோபாலன், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர், திரு.கோ.சி.இளங்கோ, ஒப்பிலியப்பன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ராயா திரு.ஆர்.கோவிந்த ராஜன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# உலகம் உய்ய உதித்த உடையவர்

*சென்ற இதழ் தொடர்ச்சி..*

ஸ்ரீ காஞ்சிபுரம் நோக்கித் தன் ஆசார்யன் ஆளவந்தார் வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தியை அறிந்த திருக்கச்சிநம்பிகள் அவரை எதிர்கொண்டு அழைக்கச் சென்றார். ஆசார்யனைக் கண்டதும் அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார். ஆளவந்தாரும் மிக்க அன்புடன் தன் சீடனாகிய ஸ்ரீகச்சிநம்பிகளைத் தூக்கி தம் சீடர்களோடும், ஸ்ரீகச்சிநம்பிகளோடும் ஸ்ரீகாஞ்சி வரதராஜப் பெருமாள் திருக்கோயிலை அடைந்தார். பெருமானைச் சேவித்துப் பேரானந்தம் கொண்டார். பெருமாளின் ஸ்ரீபாத தீர்த்தம், ஸ்ரீசடகோபம், பெருமாளின் பிரசாதம் ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு ஸ்ரீ இராமானுஜரைக் காண வேண்டும் என்ற மிகுந்த அவாவினால் திருக்கோயிலுக்கு வெளியே வந்தார். இது நிற்க,

ஸ்ரீஇராமானுஜரைக் காட்டிலே கொடிய விலங்குகள் விழுங்கியிருக்கும் என்று மகிழ்ந்த யாதவப் பிரகாசர் தன் சீடர்களுடன் கங்கை யாத்திரையை முடித்துக் கொண்டு, ஸ்ரீகாஞ்சிபுரம் வந்தடைந்தார். ஸ்ரீஇராமானுஜர் முன்பு இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு பெயரும், புகழும் பெற்று ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்ட யாதவ பிரகாசர், இனிமேலும் ஸ்ரீஇராமானுஜருடன் பகைமை பாராட்டுவது சரியல்ல என்றும், இதனால் தனக்குத் தான் அழிவு ஏற்படும் என்பதையும் உணர்ந்து, தன் சீடர்களை அனுப்பி, ஸ்ரீஇராமானுஜரை மறுபடியும் தம் பாடசாலைக்கு வரவேண்டும் எனச் சொல்லி அனுப்பினார்.

அச்சமயத்தில், வேறு நபர் யாரும் சாஸ்திர உபதேசம் செய்ய ஸ்ரீ காஞ்சிபுரத்தில் இல்லாததால், ஸ்ரீ இராமானுஜரும் நடந்ததை மறந்து, யாதவ பிரகாசரிடம் பயில வந்தார். யாதவ பிரகாசரின் அருகில் இருந்து சாஸ்திரங்களைக் கற்க வேண்டியிருந்ததால், ஸ்ரீஇராமானுஜரின் தீர்த்தக் கைங்கர்யம் தற்காலிகமாக நின்றது. ஸ்ரீஇராமானுஜர் தீர்த்த கைங்கர்யம் தற்சமயம் தமக்குப் போதும் என்று பெருமாள் முடிவெடுத்து அவரை மறுபடியும் யாதவ பிரகாசருடன் சேர்த்தார். இது நிற்க.



ஸ்ரீ காஞ்சி வரதாஜப் பெருமாளை சேவித்துவிட்டு, ஆளவந்தார் வெளியே வந்தார். வெளியே யாதவப் பிரகாசருடன் ஸ்ரீ இராமானுஜரும் வருவதைக் கண்ட ஸ்ரீ கச்சிநம்பிகள், ஆளவந்தாருக்கு ஸ்ரீஇராமானுஜரை அடையாளம் காட்டினார். ஆளவந்தாரும் தன்

**-பெ. இராமநாதபிள்ளை,**
**செயல் அலுவலர்,**
**திருமூர்த்திமலை,**

திருக்கண்களால் ஸ்ரீ இராமானுஜரைப் பரிபூரணமாகக் கண்டு அருள்பாலித்து மகிழ்ந்தார்.

யாதவ பிரகாசரைப் பற்றியும், ஸ்ரீ இராமானுஜரைப் பற்றியும் தனக்கு தெரிந்தவற்றையெல்லாம் மறைக்காமல், ஸ்ரீ கச்சி நம்பிகள் ஆளவந்தாரிடம் எடுத்து உரைத்தார்.

அதனையெல்லாம் கேட்டறிந்த ஆளவந்தார். யாதவப் பிரகாசர் என்ற அத்வைதியிடம் இருந்து ஸ்ரீஇராமானுஜரை மீட்டுத் தருமாறு தேவராஜப் பெருமாளிடம் வேண்டிக் கொண்டார். பின்பு பிரியாவிடை பெற்று ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். ஸ்ரீரங்கம் வந்து, ஸ்ரீஇராமானுஜருக்குப் பெருமாளின் கிருபை முதலான சிறப்புகள் ஏற்பட, ''ஸ்தோத்ர ரத்னம்'' என்ற நூலை அருளிச் செய்தார். அந்த நூல் எல்லோராலும் போற்றிப் புகழப்பட்டது.

ஆளவந்தாரின் சிந்தையில் ஸ்ரீஇராமானுஜரே நிறைந்து இருந்தார். சதா சர்வ காலமும் ஸ்ரீஇராமானுஜரின் நினைவிலேயே அம்மகான் இருந்தார். யாதவப் பிரகாசர் என்ற அத்வைதியிடமிருந்து ராமானுஜரை மீட்டுத் தருமாறு பெருமாளை மிகவும் வேண்டினார். ஆளவந்தாரின் பிரார்த்தனையால், ஸ்ரீ தேவராஜப் பெருமாளின் பரிபூரண கருணை ஸ்ரீ இராமானுஜருக்குக் கிடைக்கவேண்டிய நேரம் நெருங்கி வந்தது.

ஒருநாள் தைத்திரீய உபநிடதத்தில் வரும் ''சத்யம் ஞானம் அனந்தம் பிரம்மம்'' என்ற வாக்கியத்திற்கு யாதவப் பிரகாசர் விளக்கம் சொல்லிக் கொண்டு இருந்தார். இறைவனின் இயல்புகளை அழுத்தமாகச் சொல்லும் வாக்கியத்திற்கு மேற்போக்காகக் குருநாதர் விளக்கம் சொல்லுவதைக் கேட்ட, ஸ்ரீ இராமானுஜர் "குருவே இதனை வேறு விதமாக விளக்கலாமே'' என்று கூறினார்.

''எப்படிச் சொல்லுவாய்? சொல்லிப்பார்'' என முரசு கொட்டினார் யாதவப் பிரகாசர், உடனே ஸ்ரீஇராமானுஜர் கீழ்க்கண்டவாறு விளக்கம் கூறினார்.

சத்யம் = என்றும் நிரந்தரமாய் மாறாமல் உள்ளது

ஞானம் = மேலான அறிவே அரும் பண்பு

அனந்தம் = எல்லையின்மை

இறைவன் நிர்விகாரியாக (என்றும் மாறாமல் இருப்பவர்) என்றும், அறிவே பண்பாக உடையவன் என்றும், எல்லையின்மையினை இயல்பாக கொண்டவன் என்றும், மேற்கூறிய பண்புகள் அவனுடையதே தவிர, பண்பே அவனல்ல என்றும் விளக்கம் கூறினார். ஆதிசங்கரருடைய கருத்து இது இல்லை என எரிச்சலுடன் கூறினார் யாதவப் பிரகாசர், கருத்து வேறுபாட்டை நயமாய் சொன்னதோடு நிறுத்திக் கொண்டார் ஸ்ரீ இராமானுஜர்.

மற்றொரு நாள், ஸ்ரீஇராமானுஜர் தன் குருநாதர் யாதவப் பிரசாருக்கு குளியலுக்காக எண்ணெய் தேய்த்து விடும் பணியில் ஈடுபட்டிருந்தார். அந்நேரத்தில் மீண்டும் யாதவப் பிரகாசர் சாந்தோக்ய உபநிடத்தில் வரும்.

''தஸ்ய யதா கப்யாசம் புண்டரீகம்
ஏவம் அக்ஷிண''

என்ற வாக்கியத்திற்குப் பெருமாளின் கண்கள் குரங்கின் பின்புறம் இருக்கும் இரண்டு சிவந்த பகுதிகளைப் போன்றது என உடும்புப்பிடியாக முன் சொன்ன விளக்கத்தினையே மீண்டும் சொன்னார். அப்பொழுது அவரது தொடையில் வெந்நீர் கொட்டினாற்போல், நீர்த்துளிகள் விழுவதைக் கண்டு நிமிர்ந்து ஸ்ரீஇராமானுஜரைப் பார்த்தார்.

ஸ்ரீஇராமானுஜரின் கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. ''அழுவது ஏன்'' என யாதவப் பிரகாசர் கேட்டார்.

''ஞானம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீர்யம், தேஜஸ் என ஆறு குணங்களும் நிறைந்தவராய், அளவற்ற பெருமையுடையவராய் விளங்கும், ஸ்ரீ மஹா விஷ்ணுவின் கண்களைப் பற்றி அவப்பொருளை விடாமல் கூறுகின்றீரே. ஆழமான நீர் நிலையில் உண்டானதும் கதிரவனால் மலர்ந்த தாமரைப்பூ போன்ற இரு கண்களை உடைய பெருமாளின் கண்களைப் பற்றி, தாங்கள் கூறிய அவப்பொருளைக் கேட்க,. என் செவிகள் என்ன பாவம் செய்ததோ? என நினைத்து வருந்தினேன்'' என்று ஸ்ரீஇராமானுஜர் கூறினார்.

உடனே யாதவப் பிரகாசர் ''உனக்கே

எல்லாம் தெரியும் என்றால் இங்கு வருவானேன், நம்மை விட்டு விலகிப் போய்விடலாமே'' என கொடிய வார்த்தைகளால் சினம் கொப்பளிக்க மொழிந்தார். ''இனி இங்கு வராதே'' என்றார்.

''இரு கண் நீர் பெருக்க ஆங்கே யாதவப் பிரகாசர் தன்
மருவிரு துடையில் வீழ்ந்து சுறுக்கென வாளியொப்ப
உருவிட அவனும் அஞ்சி உத்தாம பூரை என்பால்
வருகலை கற்றல் இன்றே மாசிலாய் அகல என்ன'

- ஸ்ரீ இராமானுஜ வைபவம்

ஸ்ரீ காஞ்சி வரதராஜப் பெருமாளின் விளையாட்டு ஆரம்பமாகிவிட்டது. ஸ்ரீஇராமானுஜர் தம் இல்லம் சேர்ந்தார். மீண்டும் தீர்த்த கைங்கர்யத்தைப் பேரருளானுக்கும் பெருந்தேவியாருக்கும் செய்யத் தொடங்கினார், ஸ்ரீ கச்சி நம்பிகளை நாள்தோறும் பணிந்து வந்தார்.

இதனை கேள்வியுற்ற ஆளவந்தார், மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். ஸ்ரீ வரதராஜன் தன் பிரார்த்தனையினை நிறைவேற்ற ஆரம்பித்துவிட்டார். என மனமகிழ்ந்தார்.

தம் சீடரான பெரிய நம்பியை அழைத்து ''ஸ்ரீ பராங்குச தாஸரே நீர் திருக்கச்சி நகர் சென்று அடியேன் அருளிய ஸ்தோத்ர ரத்னத்தை ஸ்ரீ இராமானுஜர் கேட்கும்படியாகத் தினமும் அனுசந்தியும்'' என்றார்.

ஆசார்யன் இட்ட பணியை களிப்புடன் நிறைவேற்றப் பெரிய நம்பியும் ஸ்ரீ காஞ்சிபுரம் செல்ல ஆசார்யரான ஆளவந்தாரின் அனுமதியுடன் ஸ்ரீ ரங்கத்திலிருந்து ஸ்ரீ காஞ்சிநகருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

- தொடரும்



*பழுத்த அகங்காரம் பழுக்காத அகங்காரம் என்று இரண்டுவித அகங்காரங்கள் இருக்கின்றன. இது என் வீடு, என் அறை என் மகன் என்னும் இத்தகைய அகங்காரம் பழுக்காதது, நான் ஆண்டவனின் அடிமை; அவனுடைய குழந்தை; நான் நித்திய முக்தன் எல்லாம் அறிந்தவன் என்று நினைக்கும் அகங்காரம் பழுத்தது.*


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |


இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை


ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# அதிகை அரங்கன்





நாட்டின் பல்வேறு இடங்களில் திருத்தலங்கள் சிறப்புடன் அமைவதற்குப் பற்பல காரணங்கள் உள்ளன. அந்த இடத்தில் நடந்த இறையருட் சம்பவங்கள், இறைவனின் திருவிளையாடல்கள், யோகிகள், சித்தர்கள் போன்றோர் தவமியற்றி இறைவனிடத்தில் அருள் பெற்று மேன்மை அடைந்தது முதலிய காரணங்களின் அடிப்படையிலேயே கோயில்கள் எழுந்தன. இவற்றைப் புராண நிகழ்வுகள் என்கிறோம். அந்த வகையில் திருமணம் தொடர்பாகக் கட்டப்பட்ட ஆலயம். திருவதிகையில் அமைந்துள்ள அருள்மிகு அரங்கநாதர் ஆலயம் ஆகும்.

*திருக்கோயில் அமைவிடம்:* கடலூர் மாவட்டத்தில் பலாப்பழத்திற்கும், முந்திரிக்கும் சிறப்புப்பெற்ற பண்ணுருட்டிக்குக் கிழக்கே 2.கி.மீ. தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

*தலவரலாறு:* திருவதிகையில் கெடில நதியின் தென்கரையில் கோட்டை கொத்தளங்கள் அமைத்து அரசாண்டவன் குரும்ப மன்னன் அவன் திருமணம் செய்து கொள்ள விரும்பி தனக்குத் தகுந்த பெண்ணைத் தேர்வு செய்வதில் முனைப்பாக இருந்தான். ஸ்ரீரங்கத்தை அரசாண்டுவந்த பல்லவராயன் என்னும் மன்னனுக்கு ஒருமகள் இருப்பதை அறிந்தான், அவளைத் தனக்குப் பெண் கேட்டுவருமாறு தனது அமைச்சரை அனுப்பினான்.

பெண் கொடுக்க இசைவு தெரிவித்த ஸ்ரீரங்கத்துப் பல்லவராயன், தனது மகளிடம் சம்மதத்தை கேட்டான் அவள் தனக்குத் திருமணமே வேண்டாமென்று மறுத்துவிட்டாள். அவளிடம் ஏனென்று கேட்டபோது, 'திருமணம் செய்து கொண்டு வேறு நாட்டிற்குச் சென்றுவிட்டால் தான் தினமும் சென்று வணங்கும் திருவரங்கப் பெருமானைக் காண முடியாமல் போய்விடும்' என்பதாலேயே தனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை என்று பதில் கூறினாள்.

அமைச்சர் இச்செய்தியைத் திருவதிகை குரும்ப மன்னனிடம் தெரிவித்தபோது, ஸ்ரீரங்கம் பெருமாளைப் போன்றே திருவதிகையிலும் கோயில் எழுப்பித் தினமும் வணங்க ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி அளித்தான் அவன். ஸ்ரீரங்கத்து இளவரசியும் சம்மதித்தாள். ஸ்ரீரங்கத்திலுள்ள பெருமாள் ஆலயத்தைப் போன்றே திருவதிகையில் கோயில் எழுப்பப்பட்டது. திருமணமும் நடந்தேறியது. இதுவே திருவதிகை அருள்மிகு அரங்கநாதப் பெருமாள் கோயில் தோன்றுவதற்குக் காரணமாகும்.

**குழந்தைப் பேறு இல்லாதவர்கள் அதிகை வல்லியான அரங்கநாயகிக்கு சகஸ்ராம அர்ச்சனையும், பால் பாயசமும் அமுது செய்விப்பதாய் வேண்டி, அவ்வாறே பிள்ளைப்பேற்றைப் பெற்றவுடன் தாங்கள் வேண்டிக் கொண்டபடி நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர்.**

மூலவர்: ஸ்ரீரங்கத்து அரங்கநாதர் பாம்பணையில் பள்ளிக்கொண்டிருப்பதைப் போன்றே இங்கும் பாம்பணையில் பள்ளிக்கொண்டவாறு காட்சியளிக்கிறார். பெருமாளின் நாபியில் இருந்து உயரே எழுந்து நிற்கும் தாமரை மலரில் அமர்ந்துள்ள பிரம்மாவின் அற்புத உருவமும், பெருமாளின் திருவடி அருகில் அமர்ந்து சேவை செய்யும் ஸ்ரீதேவி, பூதேவி உருவங்களும், பிருகு முனிவரின் தவநிலையும் ஒரே கருங்கல்லினால் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தாயார்: தாயார் அரங்கநாயகியை அமிர்தவல்லி, அதிகைவல்லி என்று அழைக்கின்றனர். பெருமாள் சன்னதிக்குத் தென்புறம் தாயார் சன்னதி உள்ளது. அதில் வீற்றிருந்த திருக்கோலத்தில் நான்கு கரங்களுடன் அதிகைவல்லி காட்சியளிக்கிறாள். மூலவரான தாயாரின் திருவுருவம் எட்டு அடி உயரம் கொண்டதாகும். ஆழ்வார்கள் மங்களா சாசனம் பெற்ற வைணவ திவ்ய தேசங்களில் எதிலும் இதுபோன்ற உயரமான பெரிய தாயார் திருவுருவம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பெருமாள் சன்னதிக்கு வடபுறம் ஆண்டாள் சன்னிதி அமைந்துள்ளது. கி.பி. 10ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட உயரமான ஆண்டாள் திருவுருவம் இதில் இடம் பெற்றுள்ளது. இது காண்பதற்கு அரியதாகும்.

பெருமாள் சன்னதிக்கும், தாயார் சன்னதிக்குமிடையே சக்கரத்தாழ்வார் சன்னதி அமைந்துள்ளது. சக்கரத்தாழ்வாரின் பின்புறம் அதே சிலையில் யோக நரசிம்மர் உள்ளார்.

தெற்கு நோக்கிவாறு மணவாள மாமுனிகள் மற்றும் ஆழ்வார்கள் சன்னதிகள் அமைந்துள்ளன. இக்கோயிலிலுள்ள கோதண்டராமர், இலட்சுமணர், சீதை, ஆஞ்சநேயர் உற்சவச் சிலைகள் கி.பி. 10ம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும். இவை அற்புதமான சோழர்கால கலைச் செல்வங்களாகும்.

கோயில் மண்டபத்தில் எருமைத் தலையின் மீது நின்று கொண்டிருக்கும் சங்கு, சக்கரம் ஏந்திய விஷ்ணு துர்கையின் நான்கு அடி உயரம் கொண்ட திருமேனியைக்காண்கிறோம். இது 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். பிற்காலப் பல்லவர் காலத்தில் இக்கோயில் மூன்று திருச்சுற்றுகளுடன் பெரிய அளவில் இருந்துள்ளது என்பதை சுற்றிலும் உள்ள வரலாற்றுத் தடயங்கள் மூலம் அறிகிறோம்.

கல்வெட்டு: முதலாம் குலோத்துங்க சோழனின் மகனான விக்கிரமச் சோழன் (கி.பி.1118-1135) காலக் கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் விளக்கேற்ற திருவந்திபுரதேவன் நாராயணன் என்பவனும், இலங்கையைச் சேர்ந்த செற்றன் என்பவனும் கொடையாக நிலங்களை அளித்துள்ள செய்திகளைக் கூறுகிறது.

சிறப்புகள்: குழந்தைப் பேறு இல்லாதவர்கள் அதிகை வல்லியான அரங்கநாயகிக்குச் சகஸ்ராம அர்ச்சனையும், பால் பாயசமும் அமுது செய்விப்பதாய் வேண்டி, அவ்வாறே பிள்ளைப்பேற்றைப் பெற்றவுடன் தாங்கள் வேண்டிக் கொண்டபடி நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். தாயார். சன்னதியை 108 முறை பிரதட்சணம்(வலம்) வந்து தாயாருக்குப் புத்தாடை அணிவித்தால் நினைத்தது கைக்கூடும்.

உற்சவங்கள்: கிருத்திகைதோறும் சக்கரத் தாழ்வாருக்குச் சுதர்சன ஹோமம் சிறப்பாக நடைபெறுகிறது. பெருமாள் அவதரித்த பங்குனி மாதம் ரேவதி நட்சத்திரத்தில் மூலவருக்குச் சிறப்பு திருமஞ்சனம் நடைபெறுகிறது. தமிழ்ப்புத்தாண்டு, வைகாசி விசாகத்தில் கருடசேவை, ஆடிப்புரம், கோகுலாஷ்டமி, தீபாவளி, திருக்கார்த்திகை தீபம், மார்கழியில் பகல் பத்து இராப் பத்து, மாசிமகம், ஸ்ரீராம நவமி போன்ற உற்சவங்கள் நடைபெறுகின்றன.

வைகானஸ ஆகம விதிமுறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன.

தீர்த்தம்: அமிர்த புஷ்கரணி, கெடிலநதி
விமானம்: அனந்த விமானம்
நடைதிறப்பு: காலை 7.00 மணி முதல் 11.30. மணிவரை
மாலை 5.00 மணி முதல் இரவு 8.30. மணி வரை.

**புதுப்பேட்டை**
**வ. கோவிந்தன். எம்.ஏ.**

# தன்னையுங் காணார்

பச்சையப்பன், கல்லூரி மாணவன், நல்ல சுறுசுறுப்பானவன்; கூரிய மதியும் சீரிய வளமையும் பெற்றவன். அவன் மனத்தில் பலப்பல சிந்தனைகள் புயல்போல் தோன்றும். அறிவுப்பசி கொழுந்துவிட்டெரியும்.

ஒரு ஞாயிறு; விடுமுறை நாள்; மாலை நேரம், உலாவும் பொருட்டு ஊரைக் கடந்து வெளிப்புறஞ் சென்றான். சலசல என்று ஆரம்பிரா நதி ஓடிக்கொண்டிருக்கின்றது. அதன் கரையில் அரச மரம். அம்மரத்தின் கீழ் திருமூல நாயனாரைப்போல ஒரு மகான் அமர்ந்து இருந்தார். அவருடைய திருமுகத்தில் ஞான ஒளி பளிச்சென்று வீசிக் கொண்டிருந்தது. கண்களில் கருணை வழிந்து கொண்டிருந்தது.

மகானுடைய அருள் வடிவைக் கண்டு ஒரு கணம் மெய்மறந்து நின்றான் பச்சையப்பன். நல்ல மிடுக்கான வயது; துடுக்காகப் பேசும் திறம் உடையவன்.

பெரியவர் அருகில் வந்து நின்றான். ''சுவாமி! வணக்கம். இங்கே தன்னந் தனியாக அமரந்திருக்கின்றீரே. தாங்கள் யார்? ஏன் இங்கிருக்கின்றீர்?''

''குழந்தாய் நான் தனியாக இருக்கவில்லை. என்னுடன் இன்னொருவர் இருக்கின்றார். அவரை நீ அறியமாட்டாய்''

''சுவாமி! என்ன ஆச்சரியம்! தனித்து இருக்கின்றீர். உங்களுடன் இன்னொருவர் இருக்கின்றாரா? நான் என்ன குருடனா? யார் சுவாமி இருக்கிறார்?'' அவர் ஊருக்குள் பிச்சை எடுக்கப்போயிருக் கின்றாரா?''

''தம்பி! என்னுடன் இருப்பவர் என்னைவிட்டு ஒருபோதும் பிரியமாட்டார். அதனால் அவருக்குப் பிரான் என்று ஒரு பேருண்டு. அவரை நீ பார்க்க முடியாது''

''ஐயனே நான் மூடனல்லன்; நன்கு கல்வி பயில்கின்றவன். எனக்குக் கண் பார்வை நன்றாக இருக்கின்றது. நீர் என்னை ஏமாற்றுகின்றீரா? உம்முடன் இருப்பவரை நான் காண முடியாதா?''

''அப்பனே! அவர் என்னுடன் மட்டுமன்று. உன்னுடனும் இருக்கின்றார். அவர் பொறி புலன்கட்கு அப்பாற்பட்டவர்''

''சுவாமி! இது வெறும் கற்பனை, காணாத பொருளை உண்டென்று எப்படி நான் நம்ப முடியும்? என்னை மடையன் என்று எண்ணுகின்றீரா? ஒரு பொருள் இருக்குமா னால் கண்ணுக்குத் தெரியவேண்டாமா?

''தம்பி! உன் பேர் என்ன?''

''பச்சையப்பன்''

''நல்லது; பச்சையப்பா! உனக்கு உண்மையை விளக்க வேண்டும் என்பது என் இச்சையப்பா. நீ பேசுவது கொச்சையப்பா. நீ மோட்டார் சக்கரத்தில் உள்ள டயரைப் பார்த்திருப்பாய்



**திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்**

"அருளால் எவையும்பார் என்றான்-அத்தை
அறியாதே சுட்டியென் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்ட தல்லால் - கண்ட
என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி." - தாயுமானார்.

அதில் உள்ள டயர்தான் கண்ணுக்குத் தெரிகிறது. அதற்குள் இருக்கின்ற 'டியூப்' கண்ணுக்குத் தெரிகின்றதா? அதற்குள் உள்ளே இருக்கின்ற காற்று கட்புலனுக்குத் தெரிகின்றதா? காற்றுக்குள் இருக்கும் ஆற்றல் தெரிகின்றதா? அந்த 'டயர்' போல இந்த தூல உடம்பு; உள்ளிருக்கும் 'ட்யூப்' போல உடம்புக்குள் இருக்கும் சூக்கும உடம்பு; காற்றைப் போல் ஜீவான்மா; காற்றுக்குள்ளிருக்கும் அதனை அசைக்கும் ஆற்றலைப்போன்றது பரமான்மா.

"இத்தூல உடம்பையே நன்கு அறியமுடிவதில்லையானால், அதற்குள்ளிருக்கும் சூக்கும உடம்பையும், ஜீவான்மாவையும், உயிர்க்குயிராய் நிற்கும் பரம்பொருளையும் எப்படியறிய முடியும்?"

"சுவாமி சற்று நில்லுங்கள். இந்த உடம்பை நன்கு அறிய முடியவில்லை என்கிறீர்கள். ஏன் இந்த உடம்புதான் நன்கு தெரிகின்றதே"

"பச்சையப்பா! பொறுமையாகக் கேள்; கூறுகின்றேன். இந்த உடம்பை நீ காண்கின்றனையா?"

"ஆம் காண்கின்றேன்"

"இந்த உடம்பு முழுவதையும் பார்க்கின்றனையா?"

"நன்றாகப் பார்க்கின்றேன்"

"சற்று சிந்தித்துச் சொல்; உடம்பு முழுவதும் தெரிகின்றதா?"

"சுவாமி! நான் என்ன சிறுபிள்ளையா? கல்லூரி மாணவன் சுவாமி! சிந்திக்காமலா கூறுகின்றேன்? இதோ, இந்த உடம்பு முழுவதுந்தான் தெரிகின்றது."

"தம்பி! உன் உடம்பின் பின்புறந் தெரிகின்றதா?"

பச்சையப்பன் சற்றுத் திகைத்தான். திரும்பித் திரும்பிப் பார்க்கின்றான். பின்புறத்தைக் காண இயலுமா?

"ஐயனே! பின்புறம் தெரியவில்லை".

"நல்லது; முன்புறமாவது எல்லாப் பகுதிகளுந் தெரிகின்றனவா? நீ பார்க்கின்றனையா?"

"சுவாமி ! முன்புறம் எல்லாம் நன்றாகத் தெரிகின்றது. இதில் ஏதும் ஐயம் இல்லை"

"அப்பா அவசரப்படாதே, முன்புறம் எல்லாந் தெரிகின்றதா?"

"தெரிகின்றது; தெரிகின்றது.

"முன்புறத்தில் முக்கியமான முகந் தெரிகின்றதா?"

பச்சையப்பன் நாணினான்.

"ஐயனே, முகந் தெரியவில்லை"

"குழந்தாய்! முன்புறமும் பின்புறமும் தெரியவேண்டுமானால் இரு கண்ணாடிகள் வேண்டுமல்லவா? இரண்டு கண்ணாடிகட்கு இடையே நின்றால் இரு பக்கங்களையும் பார்க்கலாம் அல்லவா? அதுபோல்தான் பரம்பொருளையும், குருவருளுந் திருவருளுந் துணை செய்தால் காணலாம்.

"பச்சையப்பா! இப்போது நீ வீட்டிற்குச் செல், இரவு ஏகாந்தமாக இருந்து 'நீ யார்?' என்பதைச் சிந்தனை செய்; செய்து நாளை வா"

பச்சையப்பனுக்கு ஏதோ ஒரு புதிய உலகிற் புகுந்தது போன்ற ஓர் உணர்ச்சி உந்தியது. தன் வீட்டிற்குச் சென்றான். உணவில் நாட்டம் ஏற்படவில்லை. தான் படிக்குந் தனியறையில் தாளிட்டு அமர்ந்தான்.

நான் யார்? என்று சிந்தித்தான்.

அவனுக்கு நன்கு மேலே தெரிந்தது. மயிர்த்தொகுதி. "ஓ! இம்மயிர்த் தொகுதி நானா? இல்லை; இந்த உரோமமா நான்?"

"உரோமம் படர்ந்த தோல் நானா?"

"இல்லை; இல்லை"

"உரோமம் உதிர்ந்தபின், தோல் உரிந்த பின்னும் நான் இருக்கின்றேன்?"

"தோலால் மூடப்பட்ட புண் நானா?"

"சீ, நான் புண்ணாக இருக்க முடியுமா?"

"புண்ணிடை ஊறும் உதிரம் நானா?"

புண்ணுக்குள் நடுவே நடுவே இருக்கும் எலும்பு நானா?

எலும்புக்குள் இருக்கும் நாறுகின்ற மூளைக் குழம்பு நானா?

"இல்லை"

"உடம்புக்குள்ளே வழுவழுக்கின்ற கொழுப்பு நானா?"

அல்லது உள்ளே ஊர்கின்ற புழுக்கள் நானா?

"அந்தோ! அவை நானாக இருக்க முடியாது"

"பின்னை நான் யார்?'
குடலுக்குள்ளிருக்கும் மல சலம் நானா?
"சீசீ. மலமா நான்? சலமா நான்?"
"உடம்பைப் பிணித்திருக்கின்ற நரம்பு
நானா?"

"நான் யார்? ஒன்றுந் தெரியவில்லையே?"

நான் ஒரு பரம மூடன். கடலைப்பற்றிப் படித்தேன்; மண்ணைப்பற்றிப் படித்தேன். விண்ணைப்பற்றி ஆராய்ந்து படித்தேன். மதியைப் பற்றி படித்தேன். க்திரைப் பற்றிப்படித்தேன். கனலையும் புனலையும் பற்றிப் படித்தேன். பொன்னைப் பற்றிப்படித்தேன். ஆனால், என்னைப் பற்றிப் படித்தேனில்லை. என் படிப்பு என்ன படிப்பு? என்னைப் படிப்பித்த ஆசிரியரும் இதனைப் படித்தாரில்லையே?"

"மேவிய புன்மயிர்த் தொகையோ? அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ? தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ?
புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ? கூறுசெய்து
இடையிடை நிற்கும் எலும்போ?
எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ? வழுவழுத்து
உள்ளிடை ஒழுகும் வழும்போ? மெள்ள
நின்று
ஊரும் புழுவின் ஒழுங்கோ? நீரிடை
வைத்த மலத்தின் குவையோ? வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ? உடம்பிற்குள்
பிரியா தொறுக்கும் பிணியோ; என்னை
எங்கும் தேடினேன். யாதிலுங் காணேன்."

எதிரிலேயே சிவபெருமானுடைய திருவுருவம் வரைந்த படம் இருந்தது. அதனை உற்று நோக்கினான்.

கண்களை மூடினான். நெடுநேரம் அசைவற்று நின்றான்.தெய்வத்தின் திருவருள் மாலையில் கண்ட குருவருள் மூலம் உணர்த் தியது. ஆணவப் படலம் அகன்றது. ஊனவிழி மூடியது. ஞான விழி திறந்தது. பரம்பொருள் அருட்டிறத்தைக் கண்டான். தன்னையுங் கண்டான். எல்லாம் அதுவாகக் கண்டான்.

"முன்னம்
வரைத்தனி வில்லால் புரத்தைஅழ லூட்டிக்
கண்படை யாகக் காமனை ஒருநாள்
நுண்பொடி யாக நோக்கியண் டத்து
வீயா அமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்ந்த புதுவெயில் எறிப்ப
எண்ணருங் கோடி இருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத! பொருவிடைப் பாக!
மங்கை பங்க! கங்கைநா யக!நின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றனன் பெற்றபின்
நின்பெருந் தன்மையுங் கண்டேன்
காண்டலும்
என்னையுங் கண்டேன்; பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங் கண்டேன்."

பொழுது புலர்ந்தது. பச்சையப்பன் புதியவனாகி வெளிவந்தான். ஆரம்பிராவதி ஆற்றங்கரைக்கு ஓடினான். அங்கே அரசின் கீழ் அமர்ந்திருந்த ஞான அரசைக் கண்டானில்லை. அலறினான். உலறினான். "ஞான குருவே? எங்கு சென்றீர்? எங்கு சென்றீர்? எங்கு சென்றீர்?" என்று கதறினான். பதறினான்.

"அப்பனே! நான் உனக்குள்ளே இருக்கின்றேன்" என்ற இனிய வானொலியைக் கேட்டான்.

"........................ என்ன
நின்னைக் காணா மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே"
-பட்டினத்தார்.

அவனுடைய உளத்தில் ஒளி தோன்றியது.

"எங்கும் நிறைந்த இறைவா! அறியா மாந்தர் பிச்சுலகில் ஏதேதோ பிதற்றித் திரிகின்றார்கள். ஆ! ஆ! என்ன ஆனந்தம். என் உள்ளமெல்லாம் ஆனந்த வெள்ளத்தில் நனைகின்றதே!"


நானார்? என் உள்ளமார்? ஞானங்களார்?
என்று அறிவித்தனையே

உன்னை யறிந்தவர்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்கள். உன்னை உணராதார் ஒன்றையும் உணராதர்ர். உன்னைக் கண்டபின் என்னையுங் கண்டேன். உன்னைக் காணாதவர் தன்னையுங் காணார்" என்று கூறி நின்றான்.

அருளால் எவையும்பார் என்றான்-அத்தை
அறியா்தே சுட்டியென் அறிவாலே
பார்த்தேன்
இருளான பொருள் கண்ட தல்லால் -
கண்ட
என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி.

**- தாயுமானார்.**

# ஐராவதம் பூசித்த அற்புதத் தலம்
# வழுவூர் அயனீச்சரம்



வழுவை என்ற சொல்லுக்கு யானை என்பது பொருள். யானையோடு தொடர்புடைய ஊர் வழுவூர். வழுவூர் என்றதும் அன்பர்களுக்கு வழுவூர் கஜம்ஹார மூர்த்தி நினைவுக்கு வந்து விடுகிறார். அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றாக அத்தலம் விளங்குகிறது.

அங்கு அவர் யானை வடிவில் சினம் கொண்டு வந்த அசுரனை அடர்த்து அன்பர்களுக்கு அருள்செய்தார். யானை வடிவில் வந்த அசுரன் அவரை எடுத்து விழுங்க எங்கும் இருள்சூழ்ந்தது. ஒரு திருவிளையாடல் புரியக் கருதிய சிவபெருமான் சற்று நேரம் அவன் வயிற்றுள் அமைதியாக இருந்துவிட்டு உடலைப் பெரியதாக்கி வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்டார். அவனுடைய தோலைப் போர்வையாகப் போர்த்துக் கொண்டார். கிருத்தி(யானை) தோலில்)யில் வாசம் செய்வதால், கிருத்திவாசேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

இதனின்று வேறுபட்ட வழுவூர் ஒன்று உள்ளது. அத்தலமே நாம் இப்போது காணப்போகும் வழுவூர். ஆனைக்கு அருள் செய்த இத்தலம் தொண்டை நாட்டில் உள்ளது.

சென்னை - திண்டிவனம்(NH45) பெருவழிச் சாலையில் மேல்மருவத்தூருக்கு முன்பாகச் சோத்துப்பாக்கம் உள்ளது. இங்கிருந்து மேற்கு நோக்கி வந்தவாசி செல்லும் சாலையில் சென்று மருதாடு என்ற இடத்தை அடையலாம். இந்த மருதாடு இந்திரன் பூசித்த தலமாகும். இறைவன் புரந்தரேசர். அம்பிகை இந்திரப் பிரசாதவல்லி. இவர்களை வணங்கி வடக்கே 3.கி.மீ. சென்றால் வழுவூரை அடையலாம்.

ஊரின் வடகிழக்குப் பகுதியில் தெற்கு நோக்கிய தலைவாயிலும், கிழக்கு நோக்கிய சந்நிதியுமாக பிரம்மபுரீசுவரர் ஆலயம் உள்ளது. இதுவே ஐராவதம் வழிபட்டுப் பேறு பெற்ற தலமாகும்.

ஒருமுறை இந்திரன் மன அமைதியின்றித் தவித்தான். அவனுக்கு எதைக் கண்டாலும் வெறுப்பும் அச்சமும் உண்டாயிற்று. அவற்றை நீக்க வேண்டி பூவுலகிற்கு வந்து பல தலங்களில் வழிபாடு செய்தான். எங்கும் அமைதி கிடைக்கவில்லை.

இறுதியில் பிரம்மதேவர் அறிவுரையின் பேரில் தொண்டை நன்னாட்டில் மருதவனத்தில் பெருமானை வழிபட்டான். அவன் வழிபட்டதால் இறைவன் புரந்தரேசுவரர் என்றும், அவனுக்கு அருள்புரிந்ததால் அம்பிகை இந்திரப் பிரசாத வல்லி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இந்திரன் நெடுநாட்கள் இங்கேயே தங்கிவிட்டான். அவனைக்காணாத இந்திராணியும், ஐராவதமும் வருந்தினர். நாரதர் அவர்களுக்கு அவனுடைய இருப்பிடத்தை அறிவித்தார்.

அவர்கள் பிரம்மனிடம் சென்று விடை பெற்றுக்கொண்டு பூமிக்கு வந்து அவனைக் கண்டு மகிழ்ந்தனர். அவர்கள் அந்த மருதங்காட்டிற்கு வடக்கில் பிரமதேவன் தம் குற்றங்கள் தீரப் பூசித்த லிங்கம் அரசாங்காட்டில் இருப்பதை அறிந்து அங்குச் சென்றுவழிபட்டனர். அங்கு பிரம்மன் அமைத்த லிங்கத்தைக் கண்டு வணங்கிய ஐராவதம் அவரைப் பிரிய மனமின்றி அங்கேயே தங்கியிருந்தது. பெருமான் அந்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அதற்கு அருள்புரிந்தார். அதற்கு யாராலும் எப்போதும் வெல்ல இயலாத வெற்றி வாகையைச் சூடும் வரத்தைத் தந்தார்.




இந்திராணி இங்குள்ள அம்பிகையை வழிபட்டாள். அம்பிகை வெளிப்பட்டு வேண்டிய இன்பங்களை விரும்பியவாறு பெற்று மகிழ்ச்சியுடன் வாழும் வரத்தைத் தந்தாள் அதையொட்டி அம்பிகைக்குக் காமரச வல்லி என்பது பெயராயிற்று. இதற்கு விரும்பிய செல்வத்தைப் பெற்று சுகமாக வாழச் செய்யும் கொடியாக இருப்பவள் என்பது பொருளாகும்.

இப்படி குற்றங்களைக் களைந்து மகிழ்ச்சியில் திளைக்கச் செய்பவனாகச் சிவபெருமானும்

வேண்டியதை விரும்பியவாறு அடைந்து மகிழ்ச்சியுடன் வாழ வரம் அருளுபவளாக உமாதேவியும் கொலுவீற்றிருக்குமிடமே வழுவூர் ஆகும்.

இனி கோயிலுக்குள் செல்லலாம். தெற்கிலுள்ள வாயிலின் மீது விநாயகர். இடபாருடர், முருகர் ஆகியோர் அமைக்கப்பட்டுள்ளனர். இந்த வாயிலுக்கு நேராக நம்மை வரவேற்பது போல் விநாயகர் ஆலயம் உள்ளது. பெரிய சந்நிதியில் விநாயகர் வீற்றிருக்கிறார். சந்நிதிக்கு முன்புறம் பெரிய மண்டபம் அழகிய தோற்றத்துடன் உள்ளது. இது ஐராவதம் அமைத்து வழிபட்ட விநாயகர் சந்நிதியாகும்.ஆதியில் ஐராவத விநாயகர் என்று அழைக்கப்பட்ட இந்தப் பிள்ளையார் இப்போது செல்வ விநாயகர் என்றழைக்கப்படுகிறார். இவரை வணங்கி ஆலயத்தை வலம் வருகிறோம். தென்கிழக்கு முனையில் சிதிலமடைந்த திருக்குளம் உள்ளது. இது ஐராவத தீர்த்தம் என்பதாகும். இனி பெரிய மண்டபத்தை அடைகிறோம். இம்மண்டபத்தில் அழகிய புடைப்புச் சிற்பங்கள் கொண்ட தூண்கள் அணி செய்கின்றன. ஒரு தூணில் பன்னிரண்டு விநாயகர் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. இன்னொன்றில் வள்ளியின் கதை இடம் பெற்றுள்ளது. மான் வள்ளியைப் பெற்றெடுக்கும் காட்சி சிறப்பாக உள்ளது. வள்ளிக்கிழங்கை அகழ்ந்த குழியில் மான்குழந்தையை பெற்று விடுதல் நம்பிராசன் குழந்தையைக் காணுதல், மனைவியிடம் அளித்தல், வள்ளி தினைப்புனம் காத்தல், விநாயகர் யானையாக வந்து அவனை மருட்டுதல், முருகன் அவளைத் திருமணம் புரிந்து கொள்ளுதல், ஆகியன அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. காளியும் காரைக் காலம்மையாரும் காண பெருமான் ஊர்த்துவ தாண்டவமாடுதல், சிறுத்தொண்டருக்கு காட்சியளித்தல், அம்பிகை பெருமானைத் தழுவும் கம்பாநதிக் காட்சி என்று பல புராணக் காட்சிகளைக் காண்கிறோம்.

இந்த மண்டபம் சுவாமிக்கும் அம்பிகைக்கும் பொதுவானதாகக் கட்டப்பட்டுள்ளது. மண்டபத்தின் மேற்கில் சுவாமி சந்நிதிக்கான வாயிலும், வடக்கில் அம்பிகை சந்நிதிக்கான வாயிலும் உள்ளன. அவர்களை வணங்கி அம்பிகையை வணங்குகிறோம். அம்பிகை நாற்கரங்களுடன் தெற்கு நோக்கி நின்றவாறு அருள்பாலிக்கிறாள். இவள் இந்திராணிக்கு அருள்புரிந்தவள்.



இவளுடைய திருப்பெயர் காமரசவல்லி என்பதாகும்.

இவளை வணங்கி அருள்பெற்ற பின் மண்டபத்தின் மேற்கில் அமைந்த வாயிலின் வழியாக சுவாமி சந்நிதிக்குச் செல்லுகிறோம். அப்படிச் சென்றதும் உள்பிரகாரத்தை அடைகிறோம். இதை வலம் வரும்போது தென்பிரகாரத்தில் நால்வர் பெருமக்கள். அவர்களையடுத்து மேற்குப் பிரகாரத்தில் கன்னிமூலை கணபதி, சப்தமாதர்கள் ஆகியோரைக் காண்கிறோம். கருவறைக்கு நேர் பின்புறம் வள்ளி, தெய்வானையருடன் அறுமுகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். அவரையடுத்து சிறிய அழகிய மூர்த்தியாக அமர்ந்த நிலையில் உள்ள நாராயணரைக் காண்கிறோம். இவருக்கென அழகிய உபய நாச்சிமார்களுடன் உலாத் திருமேனி உள்ளது. கருவறைக் கோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரம்மன், துர்க்கை ஆகியோரும் கோமுகிக்கருகில் சண்டேசரும் உள்ளனர். இனி கிழக்கு வாயிலுக்கு வரலாம். வாயிலின் இருபுறமும் நெடிய துவாரபாலகர்கள் உள்ளனர். அவர்களுக்கு அருகில் நர்த்தன கணபதியும், முருகனும் உள்ளனர்.



இவர்களை வணங்கி மகா மண்டபத்தை அடைகிறோம். அதில் வடக்குப்புறத்தில் மேடை அமைத்துள்ளனர். அதில் தெற்கு நோக்கியவாறு சோமாஸ்கந்தர் தனியம்மன், வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமான், விநாயகர், சண்டேசர் ஆகியோர் உள்ளனர்.

இவர்களை வணங்கியபின் உள்நாழியைக் கடந்துள்ள கருவறையில் பெரிய லிங்கமாக வீற்றிருக்கும் பிரம்மபுரீசுவரரைக் கண்டு வணங்குகிறோம். அயனால் போற்றி வழிபடப் பட்டதால் அயனீச்சரர் என்றும், ஆலயம் அயனீச்சரம் என்றும் அழைக்கப்படுகிறது. அதனை வடமொழியில் பிரம்ம புரீசுவரர் என்று அழைக்கின்றனர். ஐராவதத்தால் வழிபடப்பட்டதால் ஐராவதீசுவரர் என்றும், சசியாகிய இந்திராணி வழிபட்டதால் சசீசுவரர் என்றும் அழைக்கப்படுகிறார். பூர்ண மன அமைதி, வாழ்வில் இனிமை, தேவைக்கேற்ற செல்வம் ஆகியவற்றை அருளுபவராகவும். பாவங்களை நீக்கிப் புண்ணியம் அளிப்பவராகவும் பிரம்மபுரீசுவரர் விளங்கு கிறார். கருவறை மீது இருதள ஒற்றைக் கலச விமானம் அணி செய்கிறது. அம்பிகை சந்நிதியிலும் செல்வ விநாயகர் சந்நிதியிலும் ஏகதள விமானங்கள் உள்ளன. சோழர்கள் காலம் தொடங்கி இக்கோயில் பல சிறப்பு களைப் பெற்றுள்ளது. அவர்கள் காலத்தில் அளிக்கப்பட்ட கொடைகளைக் கூறும் கல்வெட்டுகள் பல உள்ளன.

ஒருகால பூசை செய்யப்படுகிறது. கார்த்திகை தீபம், ஆருத்ரா, பங்குனி உத்திர திருக்கல்யாணம் முதலிய சிறப்பு விழாக்கள் நடத்தப்படுகின்றன. பௌர்ணமிதோறும் காமரச வல்லி அம்பிகை ஊஞ்சலில் ஆடி காட்சியளிக்கிறாள்.*

# பட்டங்கள், பதவிகள் தரும் பட்டமுடீஸ்வரர்



திருமண வரம், குழந்தைவரம், நோய் தீர்க்கும் தலம் பற்றியெல்லாம் கேள்விப்பட்டு உள்ளோம். ஆனால், பட்டத்தையும், பதவியையும் வாரி வழங்கும் இறைவன் குடியிருக்கும் ஆலயம் பற்றி அனைவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இச்சிறப்புமிகு தலம் காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள பிச்சிவாக்கம் பட்டமுடீஸ்வரர் திருக்கோயில் ஆகும். இந்த ஆலயம் 1100 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பது கூடுதல் சிறப்பாகும். இனி இதன் பெருமைகளைக் காண்போம்.

<u>தொன்மைச் சிறப்பு</u>

இன்றைய பிச்சிவாக்கம், பழங்காலத்தில் பிச்சிப்பாக்கம் என்றே அழைக்கப்பட்டது. நாளடைவில் மருவி பிச்சிவாக்கம் என்றானது.

சோழமன்னர்களின் காலத்தில் இக்கோயில் மிகவும் சிறப்புடன் விளங்கியதை அறியமுடிகிறது. பார்த்திவேந்திரவர்மன் காலத்து(கி.பி.956-969) மூன்று கல்வெட்டுகள் இதை உறுதிசெய்கின்றன.

பார்த்திவேந்திரவர்மன், இப்பகுதியை ஆண்டுவந்த சிற்றரசன் என்றும், இராஜராஜ சோழனின் சகோதரர் என்றும் இருவேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன.

இம்மன்னனின் 10வது ஆட்சி ஆண்டின் கல்வெட்டுகள் இரண்டும், 13வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஒன்றும் இந்த கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன இக்கல்வெட்டுகளில் பிச்சிப்பாக்கம் என்ற பகுதி காஞ்சிபுரத்துக் 'காமகோட்டபுரம்'



என்று கூறப்பட்டு உள்ளது. தாமர் கோட்டத்து அகம்புழலை விளத்தூர் கிழவன் என்பவன், மண்டபம் எழுப்பிய செய்தியையும், அம் மண்டபத்தின் பராமரிப்புக்கென நிலங்களை விலைக்கு வாங்கி கொடையளித்த செய்தியையும் கல்வெட்டு கூறுகிறது. எனினும் இதில் ஆலயத்தின் பெயர் குறிப்பிடப் படவில்லை. இவ்வாலயத்தில் விளக்கெரிக்கச் சோழக் கோன் படுக்கன், ஆடுங்கூத்தன் படுக்கன், கோமாளிக்கோன் பொன்னம்பி, நாராயணன்கோன் ஆகிய இடையர்களிடம் பசுக்களும், ஆடுகளும் வழங்கப்பட்ட செய்தியும் கல்வெட்டு மூலமாக அறியமுடிகிறது.

இவ்வாலயத்தில் துண்டு கல்வெட்டுகள் ஏழும், முழுகல்வெட்டு ஒன்றும் உள்ளன. கருவறை திருச்சுற்றின் மேல் தெற்கு பகுதிகள், அம்மன் கோயில் திருச்சுற்றின் சுவர், கருவறைச் சுவர் மற்றும் அம்மன் சந்நிதி ஆகியவற்றில் ஏழும் சுற்றுப்பாதை தரையில் ஒன்றுமாக எட்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் பிற்கால கல்வெட்டு ஒன்றைத்தவிர, மற்றவை வேறு இடத்தில் இருந்து இங்கு கொண்டு வரப்பட்டவை என்கிறார், இவ்வாலயத்தை ஆய்வுசெய்த தொல்லியல் நிபுணர் பொ.கோ. லோகநாதன் அவர்கள்.

**ஆங்கிலேயக் கலெக்டரின் ஆதரவு.**

ஆலயத்தின் நுழைவுவாயிலில் கி.பி. 1914ம் ஆண்டு கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இதில் திருவேங்கிட முதலியார் என்பவர் தன்னுடைய பொருட்செலவில், சிதிலமடைந்த ஆலயத்தைச் சீரமைத்தது பற்றியும், இப்பணியை தேவகோட்டை வைரவன் ஆச்சாரி என்ற ஸ்தபதி மூலம் மேற்கொள்ளப்பட்டது பற்றியும், புதிதாக மகாமண்டபம், நீராழிப்பத்தி ஆகியவை எழுப்பியதும் ஆகிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன.





இத்திருப்பணி செம்மையாக நடைபெறக் காஞ்சிபுரம் தாசில்தார் நரசிம்ம அய்யரும், செங்கல்பட்டு கலெக்டர் ரைஸ் துரையும் உதவியதையும் அறிய முடிகிறது.

**சிற்பக்கலை :**

இவ்வாலயத்து சிற்பங்கள் இதன் பழமைத் தன்மையைப் பறைசாற்றுகின்றன.

சிற்பங்கள் ஒவ்வொன்றும் தனித் தன்மையுடன் எழிலுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**ஒற்றைவிரல் காட்டும் துவாரபாலகர்கள்**

மூலவர் பட்டமுடீஸ்வர் ஆலயக் கருவறை முகப்பில் இரண்டு துவார பாலகர்கள் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவருமே தங்களது ஆட்காட்டி விரலால் உள்ளிருக்கும் இறைவனை சுட்டிக்காட்டும் விதத்தில் உள்ளனர்.

**புடைப்புச் சிற்பமான துவாரபாலகிகள்**

அம்மன் சந்நிதிகளில் பொதுவாக எளிய உருவில் துவாரபாலகியர் அமைந்திருப்பது வழக்கம். ஆனால் இங்கே புடைப்புச் சிற்பங்களாக வெகுஅழகான வடிவில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்களது உடைகள், ஆபரணங்கள், உடல் வடிவமைப்பு என அனைத்தும் அழகாக அமைந்துள்ளன.

**லிங்கோத்பவர்**

ஆலயத்தின் பின்புறம் பெரிய லிங்கோத்பவர் கோலம் புடைப்புச் சிற்பமாக புதுவிதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு கூழம்பந்தல் சோளீஸ்வர் ஆலயத்தினை நினைவுபடுத்துகின்றது.

**மூலவர் பட்டமுடீஸ்வர்**

தெற்கு நோக்கிய பிரதான வாயிலும், கிழக்கு நோக்கிய வழியும் கொண்டுள்ள இவ்வாலயத்தின் நாயகன் பட்டமுடீஸ்வரர் கிழக்கு முகமாய் காட்சிதருகின்றார். பெரிய உருவில் கம்பீரமாக காட்சி தருவது இவரின் சிறப்பு, தன்னை மனமுருகி வழிபடுவோருக்கு பட்டத்தையும், பதவியையும் தருபவர் இவரே. இந்த ஐதீகத்திற்கு ஏராளமான சான்றுகளை, சம்பவங்களை ஊர்மக்கள் கூறுகின்றனர். இக்கருவறைக்குள் மூலவரின் பின்புறம் சிறிய வடிவில் அம்மன் திருவுருவம் அமைந்துள்ளது.

தன்னை நாடி வருவோருக்கு வரங்களைக் குறைவின்றி வழங்கி வருகின்றார் பெருமான்.

**தட்சிணாமூர்த்தி**

தட்சிணாமூர்த்தியின் உருவம் கலைநயத்துடன் அமைந்துள்ளது. இதன் மற்றொரு சிறப்பு இவருக்கு நேர் எதிரே கல் ஜன்னல் அமைந்துள்ளது.



இது ஓர் அபூர்வ அமைப்பாகும். இந்த தட்சிணாமூர்த்தியை ஆலயத்தின் வெளியில் இருந்தே தரிசிக்கலாம்.

**பரமானந்த வல்லி அம்மன்**

தெற்கு நோக்கியவாறு வெளிவாயிலை நோக்கிய வண்ணமாக, வரும் பக்தர்களை வரவேற்கும் வகையில் பரமானந்தவல்லி அம்மன் சந்நிதி அமைந்துள்ளது.

ஆனந்தம் சிறப்பானது, பரமானந்தம் அதைவிட மேலானது.

பக்தர்களுக்குப் பரமானந்தத்தை தரும் அன்னையாக அவள் விளங்குகின்றாள். அம்மன் சந்நிதிக்கு முன்புறம் எழிலான தூண்கள் அணிவகுத்து நிற்பது கண்ணுக்கு விருந்தாக அமைந்துள்ளது. இதுதவிர கருவறை சுற்றில் ஓங்கார கணபதி, நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்க்கை,

சண்டிகேஸ்வரர் சந்நிதிகள் அமைந்துள்ளன.

பிரகாரத்தில் நால்வர் விநாயகர், ஸ்ரீதேவி, பூதேவியுடன் திருமால், வள்ளி தெய்வானை யுடன் முருகர், வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகசாமி என தனித்தனி திருவுருவங்கள் அமைந்துள்ளன.

மூலவரின் நேர் எதிரில் அழகிய நந்தியின் உருவம் எளிய வடிவில் அமைந்துள்ளது.

**தலமரம்.**

இவ்வாலயத்தின் தலமரமான வில்வமரம் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது.

ஆலயத்தின் அருகே திருக்குளம் அமைந்துள்ளது.

**அமைவிடம்**

பிச்சிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இயற்கை எழில் சூழ்ந்த இவ்வூர், சென்னைக்கு மேற்கே 60. கி.மீ., காஞ்சிபுரத்திற்கு வடக்கே 27.கி.மீ. பூந்தமல்லிக்கு மேற்கே 33. கி.மீ. திருவள்ளூருக்கு தெற்கே 27.கி.மீ., அரக் கோணத்திற்கு தென்கிழக்கே 17.கி.மீ., பேரம் பாக்கத்திற்கு மேற்கே 8.கி.மீ., தக் கோலத்திற்கு கிழக்கே 4.கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது.

ஊரின் ஈசான்ய மூலையில் வயல்வெளிகள் சூழ, நடுநாயகமாக இத்திருக்கோயில் அமைந்துள்ளது. சென்னை, காஞ்சிபுரம், அரக்கோணம், பூந்தமல்லி, திருவள்ளூர் பேரம்பாக்கம், தக்கோலம் ஆகிய இடங்களில் இருந்து அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இவ்வூர் வழியே செல்கின்றன.

86A, 91, 91B, 91P 107, 137, 138B ஆகிய வழித்தட எண் கொண்ட அரசுப்பேருந்துகள் பிச்சிவாக்கம் வழியே செல்கின்றன.

பிச்சிவாக்கத்தினைச் சுற்றிலும் கூவம், தக்கோலம், இலம்பையங்கோட்டூர், ஆகிய தேவாரப்பாடல் பெற்ற தலங்களும், சிவபுரம், பேரம்பாக்கம், இருளஞ்சேரி ஆகிய



பழம்பெரும் ஆலயங்களைக் கொண்ட தலங்களும் அமைந்துள்ளன.

பழமையும், பெருமையும் கொண்டு, பட்டங்களும், பதவிகளும் தந்து தன் கடமையைத் தொடர்ந்து செய்துவரும் இறைவனுக்கு, நம் கடமையைச் செய்ய வேண்டியது நம் அனைவரின் தலையாயகடமை அல்லவா?

*பிச்சிவாக்கம் செல்வோமே!*

*பட்டமுடீஸ்வர்அருள்பெருவோமே!!*

**கட்டுரை படங்கள்: பனையபுரம் அதியமான்**


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } த. பிச்சாண்டி. இ.ஆ.ப., சிறப்பு ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034.
தொலைபேசி எண்: 28334811/12/13

ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை – 86
தொலைபேசி : 23450920/ 28117575





18.03.2008 அன்று நடைபெற்ற சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயில் பங்குனிப் பெருவிழா தேரோட்டத்தில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலர் திரு. ஜி.சந்தானம் இ.ஆ.ப. அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு. த.பிச்சாண்டி, இ.ஆ.ப அவர்கள், அறங்காவலர் குழு தலைவர் டாக்டர். நல்லி. என்.குப்புசாமி செட்டியார் அவர்கள், அறங்காவலர்கள், அருள்திரு. முத்துக்குமார சுவாமி தம்பிரான் அவர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை தீவுத்திடலில் தொடங்கப்பட்ட 34வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் அமைக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை அரங்கிற்கு, சிறந்த அரங்கிற்கான மூன்றாவது பரிசும், ஒட்டுமொத்த தனிச்சிறப்பிற்கான (Out Stanting) பரிசும் தமிழக அரசால் வழங்கப்பட்டது. பரிசுக்கேடயங்களுடன் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு.த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அலுவலர்கள்.

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08

# தமிழ்நாடு பவர் ஃபைனான்ஸ்

பவர்ஃபின்

முதலீட்டிற்கு முழுபாதுகாப்பு அளிக்கும் தமிழ்நாடு அரசு நிறுவனம்

| வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு (58 வயது) |
| --- | --- |

## முறையான வட்டி வழங்கும் திட்டம் (RIPS)

| | |
| --- | --- |
| **10.47%** | **11.02%** |
| 36, 48 & 60 மாதங்களுக்கு (ஆண்டிற்கு) | 36, 48 & 60 மாதங்களுக்கு (ஆண்டிற்கு) |

## திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS)

| | |
| --- | --- |
| **12.91%** | **13.73%** |
| 60 மாதங்களுக்கு (மாதாந்திர கூட்டு வட்டி விகிதம் 10% ஒரு வருடத்திற்கு) | 60 மாதங்களுக்கு (மாதாந்திர கூட்டு வட்டி விகிதம் 10% ஒரு வருடத்திற்கு) |

- ⌘ இந்திய அரசின் நிறுவன அலுவல் அமைச்சகத்தினால் பொது நிதி நிறுவனம் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ⌘ அறக்கட்டளைகள் / வருங்கால வைப்பு நிதி / பணிக்கொடை அறக்கட்டளைகள் முதலீடு செய்ய தகுதி வாய்ந்த நிறுவனம்

## தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

டுபிட்கோ-பவர்ஃபின் டவர், எண். 490/3-4, அண்ணா சாலை, நந்தனம்,
சென்னை - 600 035. போன் : 2432 9945, 2432 9946 பேக்ஸ் : 2432 9914
ஈ-மெயில் : powerfin@md3.vsnl.net.in Visit us at : www.tninfrafinance.com / www.tnpowerfinance,.com

DIPR/ /DIS/2007

This is in continuation of our earlier advertisement published in Financial Express on 19-09-2007 Visit us at : www.in.gov.in / www.southindia.com